விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 11 ஞாயிற்றுக்கிழமை (24.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

## ஐ.நாவின் உறுப்பு நாடுகளுக்கு அறிக்கையை கையளிக்க முடிவு

### சர்வதேச ஊடகம் தகவல்

(நியூயோர்க்)

**ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா மற்றும் ரஷ்யா உட்பட ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் நிபுணர்கள் குழு அறிக்கையின் பிரதி கையளிக்கப்படவுள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களை மேற்கோள்காட்டி ஐ.பி.எஸ். எனும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை எவ்வித மாற்றங்களும் இன்றி முழுமையாக வெளியிடுவதே தங்களின் நோக்கம் என ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிப் பேச்சாளர் பர்கான் ஹக் கடந்த 21ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால் நிபுணர்கள் குழுவின் அறிக்கை நல்லிணக்க முயற்சிகளுக்கு பாதிப்பாக அமைந்துவிடும் என்பதால் இவ்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பகிரங்கப்படுத்தக் கூடாதென அரசாங்கம் வற்புறுத்தி வருகின்றது.

அதேவேளை இவ்வறிக்கை தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்கக்கூடிய வகையில் தாம் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாகவும் அரசாங்கத்தின் பதிலுக்கு காத்திருப்பதால் அறிக்கையை முழுமையாக வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் பர்கான் ஹக் கூறியுள்ளார்.

அத்துடன் இவ்வறிக்கை தொடர்பில் பதிலளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரியகால அவகாசத்தை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது.

ஆனால் இத்தகைய சர்வதேச ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் பலரும் போரின் போது கொல்லப்பட்டுள்ள நிலையில் இலங்கைப் படைத்தரப்பின் தடுப் புக் காவலிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. (ச-5)

## 483 போராளிகள் நேற்று விடுதலை

(வவுனியா)

புனர்வாழ்வளிக்கப்பட்ட 483 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நேற்றையதினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வைத்து அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வருடம் வன்னியில் இடம்பெற்ற மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்திடம் சரணடைந்த 12ஆயிரம் புலி உறுப்பினர்கள் கட்டம்கட்டமாக விடுவிக்கப்பட்டு நேற்றைய தினம் 483 பேர் வரை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் கணனி பயிற்சி, மேசன்தொழில் பயிற்சி உள்ளிட்ட பல துறைகளிலும் பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுபொருட்களும் இந் நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

இதேவேளை புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாரூக், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம், புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுகந்த ரணசிங்க உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (எ-2)

## ஐ.நாவின் முழுமையான அறிக்கை வந்ததும் மத்திய அரசின் நடவடிக்கை தேவை!

### அறிக்கை விடுகிறார் கருணாநிதி

(சென்னை)

இலங்கைப் போர்க் குற்றம் தொடர்பான ஐ.நா.பொதுச் செயலர் நியமித்த நிபுணர் குழு அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியான பிறகு, மத்திய அரசு கால தாமதம் இல்லாமல் அதைப் பற்றி முறையான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என தமிழக முதல்வர் மு.கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஈழத்து இனப் போரினை இழித்தும், பழித்தும் பேசியது யார்?என்று அதிமுக பொதுச் செயலர் ஜெயலலிதாவுக்கு அவர் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட கேள்வி - பதில் வடிவிலான அறிக்கை வருமாறு,

**கேள்வி:** இலங்கையில் கடந்த 2009-ம் ஆண்டு நடைபெற்ற போரின் போது இலங்கைப் படையினர் இழைத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக இந்தோனேசிய அரசின் முன்னாள் தலைமை வழக்கறிஞர் மர்சுகி தருஸ்மன் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் அமைத்தார். அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் எல்லாம் ஏடுகளில் (20ஆம் பக்கம் பார்க்க)



புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டபின் தனது மகளை முத்தமிட்டு ஆரத்தழுவும் அன்புத் தந்தை...

## அரசாங்கம்-தமிழ்க் கூட்டமைப்பு ஏப்-29இல் ஐந்தாம் கட்டப்பேச்சு

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கு இடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த ஐந்தாவது கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் ஆராயப்படும் விவகாரங்கள் குறித்து செய்திகள் எதனையும் வெளியிடுவதில்லை என இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனான முன்னைய சந்திப்புக்களில் அரசியல் தீர்வு உட்பட மக்களின் உடனடி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து ஆராயப்பட்டதாகக் குறிப்பிட்ட சுமந்திரன் இப் பேச்சுவார்த்தையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து ஆராயப்பட (20ஆம் பக்கம் பார்க்க)

## ஈஸ்டருக்குப்பின் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை ஈஸ்டர் விடுமுறைக்குப் பின்னரே வெளியிடப்படும் என்று ஐ.நா. பொதுச்செயலரின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.


முன்னதாக இந்த அறிக்கை இந்த வாரம் வெளிடப்படும் என்று பர்ஹான் ஹக் கூறியிருந்தார்.

எனினும் ஈஸ்டர் விடுமுறைகளுக்கு பின்னர் அடுத்தவாரமே நிபுணர்குழு அறிக்கை வெளியிடப்படும் என்று அவர் தற்போது அறிவித்துள்ளார்.

அதேவேளை இந்த அறிக்கையை இலங்கை அரசாங்கம் வெளியிட (02ஆம் பக்கம் பார்க்க)

## சாய்பாபா உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை

## பக்தர்கள் திரள்வதால் பதற்றம் நீடிப்பு



(புட்டபர்த்தி)

சாய்பாபா உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை. அவரது நிலை நாளுக்குநாள் பின்னடைவை சந்தித்துவருகிறது. டாக்டர்கள் கைவிரித்ததால் புட்டபர்த்தியில் உச்சக்கட்ட பரபரப்பு நிலவுகிறது.

புட்டபர்த்தி சாய்பாபா கடந்த 28 ஆம் திகதி இதயம் மற்றும் நுரைஈரல் பாதிப்புக் காரணமாக சத்ய சாய் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நாளுக்கு நாள் அவரது உடல் நிலை மோசமடைந்தது. கல்லீரல், சிறுநீரகம் உள்ளிட்ட உறுப்புகள் முழுவதுமாக செயல் இழந்து விட்டன.

இதயத்துடிப்பும் இரத்த அழுத்தமும் குறைந்து வருவதால் ஆபத்தான (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# சிப்பாயின் சடலம் ஒப்படைப்பு

சூட்டுக் காயத்துக்குள்ளாகி உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்கள் முன்னிலையில் இராணுவத்தினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் காவலரணில் இரவுக் காவலில் இருந்த மகியங்கனையைச் சேர்ந்த சமரக்கோன் ரவீந்திரகுமார (வயது 25) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மர்மமான முறையில் சூட்டுக் காயத்துடன் மீட்கப்பட்ட மேற்படி இராணுவச் சிப்பாயின் சடலத்தை பரிசோதனை செய்த யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி, தற்கொலை செய்தமைக்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை எனவும் முதுகுப் புறமாகவே தோட்டா உடலினுள் நுழைந்திருப்பதாகவும் ஒருவர் தன்னைத்தானே எவ்வாறு முதுகுப்புறமாக சுடமுடியும் என மேற்படி இராணுவ சிப்பாய் தற்கொலை செய்ததாக கூறிய இராணுவத்தினரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். குறித்த காவலரணில் இருவர் மட்டுமே கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில் ஒருவர் திடீரென உயிரிழந்தது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# பக்தர்கள் திரள்வதால்...

கட்டத்தில் இருக்கிறார். இன்றும் அவரது உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

சத்யசாய் உயர்நிலை மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ஏ.என். சபாயா நிருபர்களிடம் நேற்றுக் கூறுகையில், சாய்பாபாவுக்கு வெண்டிலேட்டர் மூலமே சுவாசமளிக்கப்பட்டு வருகிறது. கிட்னி செயலிழப்பால் சி.ஆர்.ஆர்.டி முறையில் இரத்த சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் தொடர்ந்து குறைந்து வருகிறது. அவரது கல்லீரல் செயல்பாடு அடியோடு நின்றுவிட்டது எனவே செயற்கைக் கல்லீரல் பொருத்தப்பட்டுள்ளது. அவருக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளித்த போதிலும் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றார்.

சாய்பாபாவுக்கு இந்தியா மட்டுமன்றி உலகம் முழுவதும் பக்தர்கள் இருக்கிறார்கள். அவர் உடல் நிலை மோசமடைந்ததால் ஏராளமான பக்தர்கள் புட்டபர்த்தியில் குவிந்து வருகிறார்கள். அசம்பாவிதம் ஏதும் ஏற்படாமல் தடுக்க அங்கு ஐயாயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். 144 தடை உத்தரவும்பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் புட்டபர்த்தியில் விவி.ஐபி. வருகைக்காக இரண்டு ஹெலிபேடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. வி.வி.ஐ.பிகளுக்குத் தேவையான வசதிகளைச்செய்ய 26தாசில்தார்களை மாநில அரசு அவசரமாக புட்டபர்த்திக்கு அனுப்பி உள்ளது. 50 ஆயிரம் பேர் அமரும் வகையில் புட்டபர்த்தியில் உள்ள அரங்கமும் தயார் செய்யப்பட்டுள்ளது. புட்டபர்த்தி மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் எல்சிடி திரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆந்திர அரச உயர் அதிகாரிகள் கூறும்போது, புட்டபர்த்தியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை மட்டுமே நாங்கள் கவனித்துவருகிறோம். சாய்பாபாவுக்கு வெண்டிலேட்டரை அகற்றுவது பற்றி டிரஸ்ட் உறுப்பினர்கள் முடிபுக்கு விடப்பட்டுள்ளது. பூனைக்கு நாங்கள் மணி கட்டமாட்டோம் என்றனர்.

அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து டிரஸ்ட் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மருத்துவமனையில் ஆலோசனை நடத்தினர். சாய்பாபா ஜீவசமாதி அடைவது குறித்து அவர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. தடை உத்தரவை மீறி பக்தர்கள் புட்டபர்த்தியில் குவிந்து வருவதால் அங்கு உச்சக் கட்ட பரபரப்பு நிலவுகிறது.



வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. பரந்தன் உமையாள்புரம் பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்தில் கார் மின் கம்பத்துடன் மோதி நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்-பிரசாந்)

# ஈஸ்டருக்கு...

வேண்டாம் என்று ஐ.நாவிடம் கேட்டுக் கொண்ட போதும் அந்த வேண்டுகோளை ஐ.நா. நிராகரித்துள்ளது.

நிபுணர்குழுவின் அறிக்கை முழுமையாக- திருத்தங்கள் ஏதும் செய்யப்படாமல் விரைவில் வெளியிடப்படும் என்பதில் ஐ.நா.உறுதியாக இருப்பதாகவும் பர்ஹான் ஹக் மேலும் கூறியுள்ளார். (ச-5)

**விற்பனைக்கு**

சகல விதமான கருங்கல் சல்லிகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு:
(4636) 0777393158

புதிய ஆண்டின் புது உதயம்
தீர்க்க சுமங்கலி திருமண நிச்சயஸ்தானம்
**திருமண சேவை**
தொடர்புக்கு: 72, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
(வீரமாகாளி அம்மன் கோவிலடி)
யாழ்ப்பாணம்.
(4678) T.P: 0776627047

**கொமினிக்கேசனுக்கு வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் தொலைத்தொடர்பு நிலையத்துக்கு தொலைபேசி, போட்டோ பிரதி இயந்திரம் இயக்குவதில் அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விரும்புபவர்கள் உடன் தேவை.
தொடர்புக்கு: 0774524780
(4673) 0776721147

**காணி உடன் விற்பனைக்கு**

திருநெல்வேலி சந்தி, யாழ்.மருத்துவ பீடத்தில் இருந்து வடக்கு புற ஒழுங்கையில் சுமார் 500 யார் தூரத்தில் 3பக்க சுற்றுமதில்களுடன் கூடியதும், தண்ணீர், மின்சார வசதியுடன் காணி முழுவதும் செல்லக்கூடிய 12' அகல பாதையுடன் கூடிய 8பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. முழுமையான கொள்வனவுகாரர்க்கு விலைக்கழிவுண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0213210904
(4680) 0778421093

**வீடு வாடகைக்கு**
**பலாலிவீதியில்**

இலுப்பையடிச் சந்திக்கும் கந்தர்மடச் சந்திக்கும் இடையில் இரண்டு வீடுகள் ஒரே காணியில் வாடகைக்கு உண்டு. பதினொரு அறைகளும் பத்து வாகனத் தரிப்பிடங்களும் கொண்டது. நிறுவனங்கள் வரவேற்கப்படும். (C-3056)
E-mail : shan0999@hotmail.com

**காணி உடன் விற்பனைக்கு**

நல்லூர் கோவில் வீதி (ரெம் பிள் றோட்) 383/15 இலக்க முள்ள 03 பரப்பு வெறும் காணி உடனடியாக விற்பனைக்கு உள்ளது. விலையை நேரடியாகப் பேசிக் கொள்ளலாம். புறோக்கர் தேவையில்லை. T.P: 0750466455
(4666)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா- கந்தசாமி (இராசையா)



சரசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தசாமி 22.04.2011 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான வல்லிபுரம்-பொன்னாச்சி தம்பதியின் அன்பு மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை, மகேஸ்வரி மற்றும் வேலுப்பிள்ளை, சங்கரலிங்கம் (கனடா) பூமணி, தேவராசா, தங்கரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருபாகரன் (லண்டன்), விஜயமலர் (லண்டன்), சுகிர்தராணி (கனடா), செல்வமலர், தவமலர் (ஆசிரியர் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகாந்தன் (N.K.S மற்றும் 27ஸ்ரீ 2004 லொறி உரிமையாளர்), தெய்வேந்திரன் (ஆசிரியர் றோ.க. த.க.பாடசாலை), உதயசந்திரன் (லண்டன்), தவரூபி (லண்டன்), விஜயரத்தினம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சாருஜன் (சாவ. இந்துக்கல்லூரி), சருமிலன் (கனடா), சாரங்கன் (லண்டன்), துளசிகரன் (கனடா), சதுர்சன் (கனடா), கீர்த்திகன் (சாவ.டிறிபேக்கல்லூரி), சங்கீத் (லண்டன்), கனிற்றா (லண்டன்), மனுஷா (லண்டன்), கிருசன் (சாவ.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2011) ஞாயிறு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொம்பிக்குளம் (சரசாலை) இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி
T.P: 077 1041095, 077 8518734
தகவல்
குடும்பத்தினர் (C-3660)

உ
சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்!
கடந்த விகிர்தி வருடம் பங்குனிமாதம் 14ஆம் நாள் (28..03.2011)
திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தந்தையும்
குடும்பத் தலைவருமான



### அமரர் சரவணமுத்து செல்லத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் கர வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை (25.04.2011) காலை 10 மணியளவில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியம் மற்றும் சபிண்டீகரண கிரியைகள் எதிர்வரும் சித்திரை மாதம் 14ஆம் நாள் (27.04.2011) புதன்கிழமை மதியம்-இல 72/50, பணிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி அன்றையதினம் (27.04.2011) காலை 9 மணியிலிருந்து அல்லைப்பிட்டி கறண்டப்பாய் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் விசேட அபிசேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தாங்களும் தங்கள் குடும்பமுமாய் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம்முடன் இணைந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
செல்லத்துரை குடும்பத்தினர்.

1ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(4671)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல்கலை மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக யாழ். எயிட் முன்னெடுத்து வரும் செயற்திட்டத்திற்கு அமைய ஆரியகுளம் புதிய உயர்கல்வி கல்லூரியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பேராதனைபல்கலைக் கழகம் ஆகியவற்றில் வெளிவாரியாக பதிந்து பட்டப்படிப்பை தொடரும் மாணவர் களில் வன்னியில் போர் அனர்த்தத்தால் பாதிப்புற்ற மற்றும் நலிவுற்ற நிலையில் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உதவி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய உயர்கல்லூரி நிர்வாக இயக்குநர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் எல்ஓஎல்சியின் வலயத்தலைவர் ரி.குமாரதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(ஶ்ரீ-3)

# இலங்கையின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் வகையில் அறிக்கை

## மகாநாயக்க தேரர்கள் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூனின் நிபுணத்துவ குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பல்வேறு பட்ட தரப்பினராலும் எதிர்ப்புக்கள் வெளியிடப் பட்டு வருகின்றன.

இதில் நாட்டின் மகாநாயக்க தேரர்கள் பிரதான இடம் வகிக்கின்றனர். அஸ்கிரிய மஹாநாயக்க உடுகம ஶ்ரீ புத்த ரகித்த தேரர் நேற்று விஷேட செய்தியாளர் சந்திப் பொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், ஐக்கிய நாடுகளின் நிபுணத்துவ குழு அறிக்கை பயங்கரவாதிகளின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இந்த அறிக்கை மூலம் இலங்கையின் எதிர்காலத்தை சீர்குலைக் கும் வகையில் சர்வதேச சூழ்ச்சிகளின் செயற்பாடுகள்அமைந்துள்ளது என ஶ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித் துள்ளார்.

(ஶ்ரீ-2)

# வாரம் ஒரு தகவல்

## இதயமும் வீணையும்

"என்னங்க, நம்ம கல்யாணத்திற்கு முன் நீங்க என்னை பெண்பார்க்க வந்தீர்களே...அந்த நாள் ஞாபகம் இருக்கிறதா"

"இப்ப எதற்கு அதையெல்லாம் ஞாபகப்படுத்துகிறாய்?" அப்ப என்னை வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்டீங்களே"

"அதையெல்லாமா இன்னும் ஞாபகம் வைத்திருக் கிறாய்?"

"என் நெஞ்சுக்குள் இருக்கும் நீங்காத நினைவு அது"

"என்ன சொல்கிறாய்? நெஞ்சக்குள்ளேயா நினைவு இருக்கிறது?"

"பின்னே இல்லையா?"

"நினைவுக்கும் இதயத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று தான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து சொல்லிவிட் டார்களே. அதன் பின்னும் நெஞ்சில் பதியவைத்திருக் கிறேன்.இதயத்தில் எழுதிவைத்திருக்கின்றேன் என்று சொல்லி கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?"

"எல்லோரும் சொல்கிறார்களே..."

"பழக்கத்தில் அப்படி வந்து விட்டது. அதனால் அதை இன்னும் மாற்ற முடியவில்லை"

"அது இருக்கட்டும். விஞ்ஞானத்தை விடுங்க "

"இப்ப விடயத்திற்கு வாங்க"

"என்ன சொல்கிறாய்?"

"அன்றைக்கு வாசித்த அதேபாட்டை அப்ப ஒரு தரம் வீணையில் வாசிக்கிறேன் கேட்கிறீர்களா?

"உன்னுடைய சங்கீதத்தை தான் நான் தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறேனே"

"எங்கே கேட்கிறீர்கள்? நான் வீணையைக் கையில் எடுத்தால் உடனே நீங்கள் வீட்டுவாசல் பக்கம் ஓடிப்போய் வெளியே நிற்கிறீர்கள்?"

"அது ஏன் தெரியுமா? அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அதை வாசிக்கிறது நான் தான் என்று நினைத்து விடக் கூடாதல்லவா... அதனால் தான்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பதவியுயர்வு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நீதிச் சேவைகள் அலுவலர் வகுப்பு I தரம் II க்கு பதவியுயர்வு பெற்றுள்ளார்.

கடந்த பெப்ரவரி முதல் கடமையை பொறுப்பேற்கும் வகையில் மேற்படி பதவியுயர்வு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப் பட்டுள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெற்று சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் சட்ட முதுமாணிப் பரீட்சையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றதுடன் லண்டன் நோர்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தினால் சர்வதேச விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-3-29)

# உறவுப்பால நிகழ்வு

(கொழும்புத்துறை)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மனித அபிவிருத்தி சமாதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் முதலாம் திகதி வரை யாழ்ப்பாணத்திலிருந்து 65 பேர் கொண்ட குழுவினர் உறவுப்பால நிகழ்வுகளுக்காக குருநாகலுக்கு செல்லவுள்ளனர்.

குருநாகல் இரபடகம கிரமமக்களின் பொருளாதாரநிலை, வாழ்க்கை முறைகள், சமாதானம் தொடர்பான செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கும் இனங்களுக்கிடையில பரிவர்த்தனையை ஏற்படுத்தும் நோக்கிலுமே இக்குழுவினர் செல்லவுள் ளனர்.

(ஶ்ரீ-3-51)

# மழைக்காலநிலை தொடரும்

நாடு முழுவதும் பரவலாக பெய்துவரும் மழைக்காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த காலநிலை மே மாதம் முதல் வாரம் வரை நீடிக்கும் எனவும் பருவபெயர்ச்சி காலநிலை மாற்றமடைந்துள்ளதன் காரணமாகவே மாலை வேளைகளில் மழை பெய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இதே வேளை இடி மின்னல் தாக்கத்திலிருந்து பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு காலநிலை தொடர்பான நிபுணத்துவர் மெரின் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)

# இராசி பலன்

2404.2011
சித்திரை 11 ,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சப்தமி பின்னிரவு 12.42 மணிவரை
பூராடம் முற்பகல் 10.31 மணிவரை
இராகுகாலம் 4.30-6.00 மணிவரை
சுபநேரம் 9.00-10.30 மணிவரை
உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா,
சித்தாமிர்தம்

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீண்பழிகள் மாறும், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பயண நன்மையுண்டு.

**இடபம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பழைய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கடகம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், உற்சாகமான நாள், தொழிலில் புதிய திட்டங்களை வகுப்பீர்கள்.

**சிங்கம்** சிறப்பான நாள், புதிய நண்பர்களின் சந்திப்புண்டு, பிள்ளைகளின் வழியில் பெருமையடைவீர்கள், பூமியால் இலாபம் கிடைக்கும்.

**கன்னி** தூரத்து உறவினரால் நன்மையுண்டு, விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், வாகன சுகமுண்டு.

**துலாம்** தொழில் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், சென்ற இடத்தில் செல்வாக்குண்டு.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடிவரலாம், வாக்கு மேன்மையுண்டு, குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், தெய்வ சிந்தை மேலோங்கும் நாள்.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், வெளியூர் பயணமொன்று உருவாகலாம்.

**மகரம்** சுபவிரயம் ஏற்படும் நாள், உறவினர் வீடுகளுக்கு செல்லும் வாய்ப்புண்டு, கதிரவன் வழிபாடு காரிய வெற்றியைத்தரும், சயனசுகக் குறைவுண்டு.

**கும்பம்** சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரும், தனவரவு திருப்திகரமாக அமையும்

**மீனம்** தொழில் சம்பந்தமான புதிய முயற்சிகளைக் கையாள்வீர்கள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள நண்பர்கள் உதவிபுரிவர், கௌரவமான நாள்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 75 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 | 90 |
| தக்காளி | 60 | 40 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 55 | 60 | 60 |
| கோவா | 30 | 70 | 70 | 80 |
| கரட் | 70 | 110 | 120 | 130 |
| பூசணி | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 30 | 30 | 80 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 65 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 70 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | 100 | - | 120 | - |
| பயிற்றங்காய் | 30 | 35 | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 70 | 100 | 70 |
| பீற்றூட் | 50 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 50 | 70 | 100 | 130 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 500 |
| போஞ்சி | 80 | - | 140 | - |
| கத்தரி தம்புள்ள | 30 | - | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 120 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 60 | 50 |

## மீன்பிடிக்கச் சென்ற முதியவர் சடலமாக நீரிலிருந்து மீட்பு

மீன்பிடிக்கச் சென்ற முதியவரொருவர் நீரிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம்நேற்று மாலை 6.30 மணியளவில் மட்டுவில் சந்திபுரம் வடக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த வ.வடிவேல் (வயது-75) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று பிற்பகல் 2மணியளவில் குறித்த முதியவர் அப்பகுதியில் உள்ள கடலேரியில் மீன் பிடிக்கச் சென்றிருந்தார். இதன்போது நீரில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்தார். சம்பவ இடத்திற்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இவரது மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-6)

## சதுரங்க போட்டி பரிசளிப்பு வைபவம்

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தில் நடைபெற்ற மாணவர்கள், அலுவலர்களிற்கான தனிநபர் மற்றும் குழுக்களிற்கிடையிலான சதுரங்கப் போட்டிக்கான பரிசு வழங்கும்வைப வம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக கணித புள்ளிவிபரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.அறிவழகன், சிறப்பு விருந்தினராக இரசாயனவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஐங்கரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**வெற்றியாளர் விபரம்**

அலுவலர் (தனி): முதலாம் இடம் ஆர்.கே. ஆதவன், இரண்டாமிடம் எஸ்.பிருந்தன், மூன்றாமிடம் கே.காங்கேயன்.

மாணவர் (தனி): முதலாம் இடம் ஜே.திரோஜன், இரண்டாமிடம் எஸ்.வித்தியாரனி, மூன்றாமிடம் ஏ.பிரதாபன்.


குழு: முதலாம் இடம் யாழ்.சதுரங்கக் கழகம், இரண்டாமிடம் யாழ்.இந்து இளையோர், மூன்றாமிடம் மகாஜனா சதுரங்க கழகம்1. (ந)

# நடு வீதியில் லொறி புதைந்தது

## கேரதீவு பாலத்தினூடான போக்குவரத்து நேற்று இரவுவரை தடைப்பட்டிருந்தது

(பூநகரி)

யாழ்ப்பாணத்திலிருந்து நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற பார ஊர்தியொன்று கேரதீவுக்கு 2 கிலோ மீற்றருக்கு முன்பாக வீதியின் நடுவே புதையுண்டதால் போக்குவரத்து தடைப்பட்டது.



கேரதீவு பாலத்திற்கு செல்லும் வீதி சரிவர செப்பனிடப்படாத நிலையில் இருப்பதோடு, கடந்த சில தினங்களாக தொடரும் கனமழை காரணமாக வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் 2 மணியளவிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீதியில் போக்குவரத்தை இடைமறித்து நின்ற பாரவூர்தியால் வீதியின் இருபக்கங்களிலிருந்தும் வந்த வாகனங்கள் தமது பயணத்தை தொடர முடியாது தவித்து நின்றன.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 5க்கும் மேற்பட்ட அரச பேருந்துகள் உட்பட தனியார் பேருந்துகள், பார ஊர்திகள், ஆட்டோக்கள், நான்கு சில் வாகனங்கள் உட்பட பல வாகனங்கள் ஒரே இடத்தில் நீண்டநேரம் தரித்து நின்றன.

இது இவ்வாறு இருக்க மறு முனையில் மன்னார், முழங்காவில், பூநகரி போன்ற பிரதேசங்களிலிருந்து வந்த அரச பேருந்து உட்பட பல வாகனங்களின் பயணமும் தடைப்பட்டன.

வீதியின் இருமுனையிலும் பல மணி நேரம் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து நின்றமை குறிப்பிடத்தக்கது. பிற்பகல் 2மணி தொடக்கம் இரவு 8மணிக்கு மேலாக வாகனத்தை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்த முயற்சித்திருந்த போதும் அது பலனளிக்கவில்லை.

வீதியின் இருமருங்கிலிருந்தும் பயணிகளுடன் வந்த வாகனங்கள் நடுவீதியில் வைத்து பயணிகள் இடமாற்றிக் கொண்டு 2 கிலோ மீற்றர் பின்பக்கமாக திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தொடர்ந்து பயணத்தை மேற்கொண்டிருந்தனர். (எ-6,84)

## முல்லைத்தீவில் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் மக்கள் நாளைய மறுதினம் 26ஆம் திகதி காலை 9மணிக்கு முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்திற்கு மீள்குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், தாங்கள் இதுவரைகாலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரிடமிருந்து விடுவிப்பு கடிதம் சமர்ப்பித்து உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அ.பத்திரிநாதன் அறிவித்துள்ளார். (ச)


Maitro PC SYSTEMS

ஆஹா!
மிகவும் மலிவு விலையில் மூன்று நாட்கள் மட்டுமே

T.P - 0779591134 175 / 3 KASTHURIYAR ROAD JAFFNA
T.P 0779591134 175/3 Kasthuriar Road Jaffna

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 01GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
38650/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 01GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
37900/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
42000/=
FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55 CHIPSET M/B
Ram 04 GB DDR 3
1000 GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
61500/=
FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
40300/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
45650/=
FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
44500/=
FREE

Intel Dual Core 3.2GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
44500/=
4GB FREE

Intel Dual Core 3.2GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
43500/=
4GB FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
52500/=
4GB FREE

Intel Core2duo 2.93GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
51700/=
FREE

(C-3059)

# பசுபிக் கடலில் அணுக்கதிர்வீச்சு 20 ஆயிரம் மடங்கு அதிகரிப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் சுனாமியால் பாதிக்கப்பட்ட புகுஷிமா அணுமின் நிலையத்தில் இருந்து வெளியாகும் அணுக்கதிர் வீச்சு பசுபிக் கடலில் கலந்து வருகிறது. இது ஆபத்தான அளவைக் காட்டிலும் 20 ஆயிரம் மடங்கு அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

டோக்கியோ எலெக்ட்ரிக் பவர் கோர்ப்பரேஷனுக்குச் சொந்தமான இந்த அணுமின் நிலையத்திலிருந்து 5 ஆயிரம் டெராபிகியூரெல் அளவுக்கு கதிர்வீச்சு கடலில் கலப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு ஆண்டு கடலில் கலக்க அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் 20 ஆயிரம் மடங்கு அதிகமாகும். கதிர்வீச்சுக் கழிவின் அளவு 520 தொன் அளவுக்கு இருக்கும் என தெரியவந்துள்ளது.

அணுமின் நிலையத்திலிருந்து இப்போது தான் முதல் முறையாக வெளியாகும் கதிர் வீச்சு அளவு அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 6 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்தில் இந்த அளவுக்கு கதிர் வீச்சு கடலில் பரவியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், கடலில் இப்போது பரவியதாகத் தெரிவிக்கப்படும் அளவைக் காட்டிலும் அதிக அளவு கதிர்வீச்சு பரவியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த மார்ச் மாதத்திலிருந்தே கடலில் அணுக்கதிர்வீச்சு பரவி வருகிறது. மார்ச் 11 ஆம் திகதி ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கமும் அதைத் தொடர்ந்து சுனாமி பேரலையின் தாக்கத்தால் புகுஷிமா அணுமின் நிலையம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதனால் இந்த ஆலையைச் சுற்றியிருந்த மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். இதனால் ஆலையைச் சுற்றி 2 கிலோ மீற்றர் பரப்பளவில் இருந்த மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இருப்பினும் இந்த ஆலையில் அணு உலையைக் குளிர்விக்கும் பணியில் 6 ஊழியர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து அணு உலை 2 இன் ரியாக்டர் டர்பைனிலிருந்து கழிவுகளை வெளியேற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கழிவுகளை பாதுகாப்பான இடத்தில் வெளியேற்றுவதற்குப் பதில் கடலில் கலக்க விடுவதால் கதிர்வீச்சு அளவு அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது. கடந்த ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து ஒருமணி நேரத்துக்கு 4.3 தொன் அளவுக்கு கதிர்வீச்சு கடலில் கலப்பதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## மேதினக்கூட்டம்

புதிய ஜனநாயக மாக்சிய லெனினிசக் கட்சி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி நான்கு பிரதேசங்களில் தனது மேதினக் கூட்டங்களை நடத்தவுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் யாழ். ப.நோ.கூ.ச. மண்டபத்திலும் அட்டனில் சக்தி மண்டபத்திலும் கொழும்பு வெள்ளவத்தையிலும் வவுனியாவிலும் மேற்படி மேதினக் கூட்டங்கள் இடம்பெறும்.

இக்கூட்டங்களில் கட்சியின் தலைமைக் குழு தோழர்களான சி.கா.செந்திவேல், வை. மகேந்திரன், இ. தம்பையா, சோ. தேவராஜா, ச. பன்னீர்ச்செல்வம், க.தணிகாசலம், கா.செல்வம்கதிர்காமநாதன் உட்பட தொழிற்சங்க இளைஞர் அணி வெகுஜன அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். (ஸ்ரீ-2)

## க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான முன்னோடி பொதுப் பரீட்சை

(கொழும்பு)

தமிழ் மாணவர்களின் நன்மை கருதி மொரட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட தமிழ் மாணவர்களால் இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மன்னார், மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் ஒரே நேரத்தில் 2011 உயர்தர மாணவர்களுக்கு இணைந்தகணிதம், உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் பாடங்களுக்கு முன்னோடி பரீட்சை ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்திலும் பழைய மற்றும் புதிய கல்வித்திட்டங்களுக்கு அமைவாக இரண்டு விதமான பரீட்சைக்கும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியும். இவ்வினாத்தாள்கள் அனைத்தும் இலங்கையின் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும்பிரபலஆசிரியர்களால் தயாரிக்கப் பட்டதாகும்.

இவ்வினாத்தாள்கள் அனைத்தும் இரண்டு வாரங்களுக்குள் திருத்தப் பட்டு புள்ளியிடும் திட்டம் வழங்கப் பட்டு அனைத்து மாணவர்களையும் Z புள்ளி அடிப்படையில் தரப்படுத்தி இலங்கையின் பிரபல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இப்பரீட்சையின் நோக்கம் மாணவர்கள் தமது தற்போதைய நிலையை அறிந்து கொண்டுஎதிர்வரும் ஓகஸ்ட்மாதம் நடைபெறவுள்ள பொது பரீட்சைக்கு தயார்ப்படுத்திக் கொள்வதற்கேயாகும்.

பரீட்சை எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அனைத்து மாணவர்களும் இப்பரீட்சைக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுமாறு மொரட்டுவ பல்கலைக் கழக மாணவர் சமுதாயம் கேட்டுள்ளது.

இதற்கமைய இணைந்த கணிதம்I, உயிரியல்I எதிர்வரும் 14 ஆம் திகதியும் இணைந்த கணிதம் II, உயிரியல்II, எதிர்வரும் 15 ஆம் திகதியும், பௌதீகவியல் I எதிர்வரும் 17 ஆம் திகதியும், பௌதீகவியல் II எதிர்வரும் 18 ஆம் திகதியும் காலை 8.30 மணி தொடக்கம் 11.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

அத்தோடு இரசாயனவியல் I எதிர்வரும் 20 ஆம் திகதி 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரையும் இரசாயனவியல் II எதிர்வரும் 21 ஆம் திகதி 2.30 மணி தொடக்கம் 5.30 மணிவரையும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3)


27 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07.02.1983

மறைவு 26.03.2011

அமரர் சம்பந்தன் சக்திதரன்

நேற்றுவரை நம்மோடு நிஜமாக நின்றிருந்தாய்
போற்றுதற்குரிய நல்லாசானாய் வாழ்ந்திருந்தாய்
காற்றோடு வந்தசேதி நண்பா உனை கனவென்று சொல்கிறது
மாற்றீடு ஏதுமில்லை உனையெண்ணிப் புலம்பலன்றி...!

வாழ்த்துப்பா எழுதியுனை வாழ்த்தவென்று காத்திருந்தோம்-புகழ்
பூத்துப்போய் பாரெங்கும் பெருமகனாய் வாழ்ந்தவுனை
நீத்துப்போனது இதயம் அஞ்சலிப்பா எழுதுகையில்-என் செய்வோம்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்தித்து படைத்தவனை நோதலன்றி....!

(4674)

யாழ் இந்துக் கல்லூரி 2002 A/L பிரிவு நண்பர்கள்



STUDY / WORK / LIVE in NEW ZEALAND AND AUSTRALIA

STUDY + WORK + PR

BIBM ஆனது உங்கள் உயர்கல்விக்கான நிபுணத்துவமிக்க ஆலோசனை வழங்குவதன் மூலம் New Zealand & Australian Work Permit & Migrationஇற்கான வழிமுறைகளை இலகுவாக்கி துரித கதியில் அடைய வழி வகுக்கிறது.

June / July. 2011 INTAKE



BIBM
Wellawatte

- Study 1 - 2 years and get work permit in New Zealand & Australia.
- Low Course Fees
- Widely job available destination

Courses at all level ( Certificate / Diploma / Degree )

Business, IT, Accounting, Travel & Tourism, Hospitality Management, Cabin Crew Flight Operation, Automotive Technology, Dental Technology, Aged care & Child care , Air Craft Maintenance.

- PR ற்கான நிபுணத்துவமிக்க முறையில் பாடநெறி தெரிவு
- Expert advice on Academic & Funding Requirements.
- Expert Visa Document Preparation

Affordable course fees, & flexible payment options.
Exemptions are offered HND EDEXCEL, ABE, NCC, BCS, ACCA & CIMA qualified & part qualified students.

Hotline : 077 1553323

Carry all your academic documents for an appointment

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A. Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk
www.bibm.edu.lk



புதிய நவீனரக பிறேம் வகைகளும் multy Codted Lens & Progressive Lens (ஒளித்தெறிப்பு வில்லையும் குறில், நெடில் வில்லைகள்) வகைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். மற்றும் கண் பரிசோதனை செய்து உடன் கண்ணாடி வழங்கப்படும். Free Eye Testing



சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்



பற்கள் கட்டவும், மிதப்புப் பற்களுக்கு தற்காலிக + நிரந்தர கிளிப் போடவும் நாடவேண்டிய இடம்

516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7631


# மாட்சியுடன் உயிர்த்தெழுந்த நம் இறைமகன் கிறிஸ்துவை துதிப்போம்

பொழுது விடிந்து கொண்டிருந்தது. எனினும் எருசலேம் நகரம் இன்னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விழித்தும் விடியாத நிலையில் நறுமணப் பொருட்களுடன் மங்கையர் மூவர் விரைந்து சென்றனர் ஒரு கல்லறை நோக்கி. பல விதமான ஐயப்பாடுகளுடனும் அச்ச நடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத் தெய்வத்தை தேடி, இனிய தூய நினைவுகளுடன் கல்லறையைப் பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் அங்கே ஒரு வெற்றித் தூதுவானவரால் அறிவிக்கப்பட்டது. ***அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்... (லூக் 24:6)*** அறிவிப்புக் கேட்டு ஆனந்தம் கொண்டனர்.

உயிர்த்த இயேசு ஒரு மாபெரும் சக்தி. யாரும் எதிர்கொள்ள முடியா வல்லமை. உயிர்ப்பு நிகழ்ச்சி இதை உறுதிசெய்கிறது. கடவுளுக்குக் கல்லறையா? கல்லறைக்கும் காவலா? பகலவன் முன்னே பனித்துளியா? பறந்துபோனது வாயிற்கல் வல்லதேவன் வானகம் சென்றார். அனைவருக்கும் இந் நல்ல செய்தியை அறிவித்தனர். இயேசுவின் உயிர்ப்பு கல்லைப் புரட்டியது. காவலையும் தாண்டிக் கடந்து சென்றது. காவலும் கல்லும் கல்லறையும் உயிர்த்த இயேசுவை கட்டுக்குள் வைக்க முடியவில்லை. அவ்வாறே உயிர்ப்பின் வல்லமையால் உரமூட்டப்பட்ட கிறிஸ்தவனையும் யாரும் எதுவும் அடக்கி விட முடியாது. அவன் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறான். எங்களுக்குள் இருக்கும் பலவீனமோ, நோயோ எங்கள் வாழ்க்கைச் சிக்கல்களோ, எங்கள் எதிரிகளோ, யாரும் எங்களைக் கட்டி அடக்கி ஆள முடியாது. ஆவியின் வல்லமையால் எங்களை நிறைத்துக்கொண்டால், நாங்கள் வாழ்வில் வீழ்ந்தாலும், தாழ்ந்து போகமாட்டோம். மண்ணில் புதைந்தாலும் மக்கிப் போகமாட்டோம். விதையாக மீண்டும் முளைப்போம். மிகுந்த பலன்பெறுவோம். விருட்சமாக வளர்ந்து பலன் கொடுக்கும் வாழ்க்கையை, உலகில் வாழும் போது வாழ்வோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நாள் வானம் பூமிக்கு வாழ்த்துக் கூறிய ஒரு நன்னாள். ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுகிற பெரு நாள். வீழ்ந்தோருக்கும், வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலை நாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும், உண்மைக்கும் பொய்மைக்கும், நீதிக்கும் அநீதிக்கும், அன்புக்கும் அராஜகத்திற்கும் இடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பெரும் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும், உண்மையின் சக்திகளும், நீதியின் சக்திகளும், அன்பின் சக்திகளும் வெற்றி பெறும் என்பதை உணர்த்தும் விழாதான் உயிர்ப்பு விழா.

தீமைக்கும், பொய்மைக்கும் இருளுக்கும் வன்முறைக்கும், சாவுமணி அடிக்கும் விழா தான் உயிர்ப்பு விழா. உண்மை உறங்கும் ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும்



ஆனால் நலியாது! அன்பு அமுக்கப்படும் ஆனால் அழியாது என்பதை சுட்டிக்காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா. அன்று உங்களுக்கு அமைதி உரித்தாகுக (லூக் 24:36) என்ற இயேசுவின் வார்த்தை துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும், தேய்வுக்கும் ஒரு முடிவு கட்டி உள்ளத்துக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கலாசாரச் சீர்கேடு

## தீமைக்கும் பொய்மைக்கும் இருளுக்கும் வன்முறைக்கும் சாவுமணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா

களும், தற்கொலைகளும், கொடுமைகளும் தாண்டவமாடும் இந்நாட்களில் கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கும், அன்பு, அமைதி, நீதி ஆகிய நற்பண்புகளை அள்ளித்தரும் உயிருள்ள வார்த்தைகளை அளித்திட வேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.

இன்று சமூக அடிமைத்தனமும், சீர்கெட்ட மனிதவாழ்வால் பாவ அடிமைத்தனமும் உலகில் தலைவிரித்தாடுவது கண்கூடு. இதன்விளைவாக மனிதர்கள் இனரீதியாக, வர்க்கரீதியாக, மொழி ரீதியாக, கலாசார ரீதியாக, தொழில்ரீதியாக, மதரீதியாக பல்வேறுபட்ட முரண்பாடுகளூடாக பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் வாழ்வுக்காக ஏங்கும் மக்கள் போலிகளையும் மாயைகளையும் நம்பி தங்கள் வாழ்வை அழித்துக் கொள்கிறார்கள். இயேசுவைப் பொறுத்தமட்டில் ஒளியின் முழுமை தோன்றிவிட்டது. ஆனால் நம்மைப் பொறுத்தமட்டில் கதிரவன் இன்னும் நடுவானில் வரவில்லை. இருள் இன்னும் முற்றிலுமாக அகலவில்லை. இயேசு நமக்குக் கொணர்ந்த மீட்பினை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் போது தான் நமது இருள் முழுமையாக மறைந்தொழியும்.

இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ந்துவிட்டது. ஆனால், இருள் இன்னும் அகலவில்லை. இவ்வுலகில் போரும் பசிப்பட்டினியும் இன்னும் நிலவுகின்றன. ஏழைகளும் அகதிகளும் ஒடுக்கப்பட்டோரும் மனித மாண்பு இழந்துநிற்கின்றனர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு காட்டப்படுகிறது. ஆண்டவர் ஏற்பாடு செய்த நாள் இதுவே. ஆனால் நாம் இன்னும் மகிழ்ந்து அக்களிக்க முடியவில்லை. ஏனென்றால் உயிர்ப்பின் மாட்சியை நாம் இன்னும் முழுமையாக நமதாக்கவில்லை. இந்த உலகுக்கு உரியதாக்கவில்லை. எனவே நாம் இயேசு உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்னும் உண்மையின் அடிப்படையில் அவருடன் இளமைப் பருவம், பணிவாழ்வு ஆகியவற்றை நாம் ஒரு புது ஒளியில் இவ்வருடம் காண்போம். கிறிஸ்துவின் வழியாகப் புத்துயிர் பெற்ற நாம் அதை நம் அன்றாட வாழ்வில் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவை நமக்கு மீட்பராக அளித்த கடவுளை அன்புசெய்து, நம்மை அடுத்திருப்போரையும் அதே அன்போடு நாம் அரவணைக்கும் போது உண்மையிலேயே புதுவாழ்வை நடைமுறையில் வெளிப்படுத்துவோம்.

இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியை சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளி வரும்வரை

அருட்சகோதரர் றமேஸ் அ.ம.தி

தான் இருளின் ஆட்சி. ஒளிவந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி, தர்மத்தின் சக்திகளும், நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். இறைமையும், மனித நேயமும் வெற்றி வாகை சூடுவது உறுதி.

இதுதான் பல எதிர்ப்புக்களுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம். உள்ளங்களுக்குள் ஒழிந்திருக்கிற பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு என்னும் கருணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு எமது வாழ்வில் வீறுநடை போடுவோம்.

# முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பிறப்பு,இறப்பு காணிப்பதிவுகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

சுனாமி அனர்த்தம், யுத்தம் என்பவற்றின் விளைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி, பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகள் பெருமளவில் அழிந்தும் காணாமலும் போய் விட்டன.

ஆகையால் அவற்றை உரியவர்களுக்கு மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு புதிய நீதிமன்றத்தின் நிர்மாணப் பணிகளை கண்காணிப்பதற்காக அமைச்சர் கடந்த வியாழக்கிழமை மாலை அங்கு சென்றிருந்தார்.

இதன்போது மாவட்டச் செயலகத்தில் அரச அதிகாரிகள், ஊர்ப்பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கொடூர யுத்தத்தின் இறுதிக்கட்டம் இங்கு தான் நடந்து முடிந்தது. சுனாமி அனர்த்தமும் இங்கு ஏற்பட்டது. அவற்றின் விளைவாக இங்கு வாழ்ந்த மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அதனால் அவர்கள் தமது காணி உறுதிகளையும் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும் திருமணப் பதிவுச் சான்றிதழ்களையும் ஏனைய முக்கிய ஆவணங்களையும்இழந்து விட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு அவ்வாறான ஆவணங்களை மக்கள் மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடமாடும் சேவையொன்றை முல்லைத்தீவில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அழிந்துபோன அல்லது காணாமல் போன காணி உறுதிகள், உறுதிப்பத்திரம் (பெர்மிட்) என்பவற்றை பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் காணிப்பதிவகம், நில அளவைத் திணைக்களம் என்பன முறையாக செயற்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக நடமாடும் சேவையொன்றின் அவசியம் உள்ளது.

வன்னி மாவட்டத்தில் வாக்காளர் இடாப்புக்களிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பெயர்கள் வசிப்பிடத்தை நிரூபிப்பதற்கான போதிய சான்றுகள் இல்லையென்ற காரணத்தால் நீக்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் மீள்குடியேறிய தமிழ், முஸ்லிம் மக்கள் தமது வாக்குரிமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நடவடிக்கையெடுக்காது விட்டால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையிலும் குறைவு ஏற்படும் அபாயம் உள்ளது. ஏனைய தேர்தல்களிலும் இது பாதிப்பை ஏற்படுத்தும்.

அத்துடன் முல்லைத்தீவில் உபதேர்தல் அலுவலகம் ஒன்று விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கு போதிய உட்கட்டமைப்பு, வாழ்வாதார வசதிகள் செய்து கொடுக்கப்படாமை பாரிய பிரச்சினையாகும். போதிய மலசல கூட வசதிகள் கூட அவர்களுக்கு இல்லை என்றார்.

(ஸ்ரீ-2)

# விடுதலைப்புலி உறுப்பினரை தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதான உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் ஒருவரைத் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து இரகசியப் பொலிஸாரினால் குறித்த சந்தேகநபர் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் கொழும்பு உள்ளிட்ட சில பகுதிகளுக்கு வெடி பொருட்களை கொண்டு செல்வதற்கு உதவி புரிந்துள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் ஆற்றல் அரசாங்கத்துக்கு உண்டு

## நாமல் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் ஆற்றல் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி விடயங்களில் மற்றும் ஏனைய விடயங்களில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து வரும் எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடி பணியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்ச் சூழல் முடிவுற்ற பின் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட முதலாவது வீடமைப்புத் திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பிரஸ்தாப வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் வடக்குப் பிரதேசங்கள் பல துறைகளிலும் பாரிய பின்னடைவைக் கண்டிருந்தன. இங்குள்ளவர்களுக்குத் தமது பிள்ளைகளுக்கு ஒழுங்கான கல்வி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் வழியிருக்கவில்லை.

ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இந்தப் பிரதேசத்தை மீட்டெடுத்த பின் சயனைட் வில்லைகளுக்குப் பதில் பாடசாலைப் புத்தகங்களை ஏந்தும் வாய்ப்பு இங்குள்ள குழந்தைகளுக்கு கிட்டியுள்ளது.

அத்துடன் இன்றைய அரசாங்கத்தின் கீழ் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் மூலமாக வடக்கு மக்கள் சுதந்திரமான நிம்மதியான சூழலில் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குவைத்தில் சட்டவிரோதமாக தொழில்புரியும் இலங்கையர்களை நாடு திரும்ப கோரிக்கை

(கொழும்பு)

குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கி இருந்து தொழில் புரிந்த ஆயிரத்து 600 பேர் இதுவரை நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் 9 ஆயிரம் பேர் அளவில் அங்கு சட்டவிரோமாக தங்கியிருப்பதாகவும் பணியகம் தெரிவிக்கின்றது.

குவைத் அரசு வழங்கியுள்ள பொது மன்னிப்புக் காலத்தைக் கருத்திற் கொண்டு சட்டவிரோதமாகத் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்ப வேண்டும் எனவும் அது வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறு நாடு திரும்ப விருப்பமுள்ளவர்கள் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும் என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# கற்பிட்டியில் மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப் பிராணி

(கொழும்பு)

கற்பிட்டியை அண்டிய பிரதேச கடற்றொழிலாளர்களின் வலையில் இதுவரை இனம் காணப்படாத மர்மக் கடல் பிராணியொன்று சிக்கியுள்ளது.

கற்பிட்டியின் முகத்துவாரம் பிரதேசத்தை அண்டிய நாவலடி பிரதேச மீனவர்களின் வலையிலேயே நேற்று முன்தினம் அதிகாலை பிரஸ்தாப மர்மப் பிராணி சிக்கியுள்ளது. அது குறித்து அவர்கள் மீன்பிடித்துறை அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவித்துள்ளனர்.

பிரஸ்தாப விலங்கு நான்கரை அடி நீளமான உடற்பகுதியையும் ஐந்தடிக்கும் மேலான வால் பகுதியையும் கொண்டிருந்ததுடன் அதன் உடம்பு முழுவதும் உரோமங்களால் மூடப்பட்டிருந்தது. அத்துடன் இரண்டு கைகளும் அதற்கு அமைந்திருந்தது.

விலங்கைப் பரிசோதித்த மீன்பிடித்துறை அதிகாரிகள் அது இதுவரை இனம் காணப்படாத கடல்வாழ் முலையூட்டி ஒன்று எனத் தெரிவித்துள்ளனர்.

அதன் உடலை கொலஜின் எனும் புரத வகையொன்றே உரோமம் போன்று மூடியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

விலங்கு இறந்து போயிருந்த காரணத்தால் அதனைப் புதைத்து விட்டு அதன் பின் அதன் எலும்புகளைத் தோண்டியெடுத்து ஆய்வுகளை மேற்கொள்ள நிபுணர்கள் முடிவெடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# கணனி குற்றச் செயல்கள் 90 வீதத்தினால் உயர்வு

(கொழும்பு)

கணனி குற்றச் செயல்களின் எண்ணிக்கை 93 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகத் குறிப்பிடப்படுகிறது.

2010 ஆம் ஆண்டில் கணனி சார் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறிப்பாக இணையமூடாக சட்விரோத செயற்பாடுகள் உயர்வடைந்துள்ளதாக கணனி அவசர செயற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக முன்னணி கணனிப் பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான சிமொன்டெக் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இணையமூடாக கணனி வலையமைப்புக்களை தாக்கும் நடவடிக்கைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளதாகவும் கணனிகள் மட்டுமின்றி கையடக்கத் தொலைபேசிகளும் அண்மைக் காலமாக அதிகளவில் தாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஜோர்தானில் இலங்கை பணியாளர்கள் போராட்டம்

ஜோர்தான் தலைநகரத்திலும் சகா நகரத்திலும் பணியாற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் கடந்த 10 நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளை சேர்ந்த சுமார் 1400 பணியாளர்கள் இந்த தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்தான் தொழில் சட்டத்திற்கு அமைய மாத வேதனமாக குறைந்தது 150 ஜோர்தானிய டினார் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தமக்கு 110 ஜோர்தானிய டினார்களே வழங்கப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் தொழில் வழங்குநர் ஜோர்தான் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் அடிப்படையில் சேவை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் எதிர்வரும் மூன்று நாட்களுக்குள் தமது வேலை ஸ்தலங்களுக்கு சமுகமளிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்.

அவ்வாறுதவறும்பட்சத்தில் அவர்கள் அனைவரும் வேலை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொழும்பில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் கலைக்கண்காட்சி

(கொழும்பு)

இராணுவத்தின் தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்படும் விடுதலைப்புலி உறுப்பினர்களின் கலைக்கண்காட்சியொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தேசிய கலாபவனத்தில் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் பிரஸ்தாப கண்காட்சி நடைபெறவுள்ளதுடன் தடுப்புக் காவலிலுள்ள புலி உறுப்பினர்களின் சுமார் 400 கலைப்படைப்புகள் அங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் குறித்த கண்காட்சியில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கண்காட்சியின் போது தடுப்பு முகாமில் இருக்கும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் ஓவியங்கள் மற்றும் கைப்பணிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கண்காட்சிக்கென ஆயிரக்கணக்கிலான படைப்புகள் கிடைக்கப் பெற்றிருந்த போதும் அவற்றில் மிகச் சிறந்ததாக கணிக்கப்பட்ட 400 படைப்புகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கண்காட்சிக்கான எண்ணக்கருத்து மற்றும் செயல்வடிவ பங்களிப்பை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)


union assurance
Trust in your tomorrow, today.
வேலைவாய்ப்பு
Join us as an Insurance Adviser to experience what you hoped for...
රක්ෂණ උපදේශකයෙකු ලෙස අප හා අත්වැල් බැඳගන්නා ඔබගේ සිහිනයන් නිසැකවම අපි සැබෑ කරන්නෙමු...
உங்கள் நம்பிக்கைக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காப்புறுதி ஆலோசகராக எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்.






இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பு) இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.

பதவி வெற்றிடங்கள்

சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
பதவி - 4 ← தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
பதவி-1
பதவி - 2 ← தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள் :-
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

குறிப்பு:- ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- திங்கட்கிழமை - 25.04.2011
நேரம் :- மு.ப 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

திரு. ந.பிரகாஸ்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே: 0773769045
(சி-3038)

# சந்தேகத்தின் பேரில் 7 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கடந்த ஏழு வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பதுளையைச் சேர்ந்த ஒருவரை அவரது வழக்கில் இருந்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

பதுளையைச் சேர்ந்த கந்தசாமி தவராஜன் (வயது 44) என்பவர் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பிலான இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் எதிரியின் குற்ற வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு எதிரியின் சார்பில் சட்டத்தரணி கிருத்திகா முத்துராஜாவால் வழக்காடப்பட்டு வந்தது.

அந்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தில் குறித்த சந்தேக நபர் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதுடன் படையினருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கை விசாரணை செய்த மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி பி.சசிமகேந்திரன், குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு உதவி பொலிஸ் அத்தியட்சகர் உட்பட ஏனைய இரண்டு சாட்சிகளை நெறிப்படுத்தி குறித்த வழக்கினைக் கொண்டு நடத்தியிருந்த போதும் குறித்த ஒப்புதல் வாக்கு மூலம் எதிரியால் சுயமாக வழங்கப்படவில்லை என்பதுடன் சட்டம் தேவைப்பாடுகளுக்கு அமையவும் வழக்குப் பதியப்படவில்லை என்ற அடிப்படையில் குறித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரித்து இக்குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை விடுதலை செய்திருந்தார்.

இதேபோன்று குறித்த எதிரிக்கு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைக் கொண்டு கல்முனை மேல்நீதிமன்றில் ஆறு வழக்குகளும் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இந்த வழக்கில் இருந்து எதிரியை விடுதலை செய்துள்ளதால் ஏனைய வழக்கில் இருந்தும் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதாக சட்டத்தரணி கிருத்திகா முத்துராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 400க்கும் மேற்பட்ட அகதிகள் நாடு திரும்புவதற்கு விருப்பம்

தமிழகத்தின் வேலூர் மாவட்ட அகதிகள் முகாமில் இருக்கும் தமிழ் அகதிகள் மீண்டும் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1983 கறுப்பு ஜூலை மற்றும் அதன் பின்னரான இனப் போரையடுத்து இலங்கையில் இருந்து இலட்சக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவின் தமிழ்நாட்டில் அகதிகளாக குடியேறியுள்ளனர். மாநிலம் முழுவதிலும் அவர்களுக்கான அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் மட்டும் வேலூர் மேல்கொணவூர், வாலாஜா அணைக்கட்டு, பாணாவரம், குடியாத்தம், ஆம்பூர், சின்னப்பள்ளிக்குப்பம், மின்னூர் ஆகிய முகாம்களில் மொத்தம் நான்காயிரம் வரையான அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் பேரில் வேலூரில் இருந்து மட்டும் நூற்றுக்கும் அதிகமான தமிழ் அகதிகள் மீண்டும் நாடு திரும்ப சம்மதம் தெரிவித்துள்ளனர். அவர்களைப் பற்றிய விபரங்கள் தமிழக அரசின் பொலிஸ்துறைக்கும்வருவாய்த் துறைமற்றும்கியூ பிரிவு பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இலங்கை திரும்புவதற்கான செலவை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 46 ஆவது ஆண்டுவிழாவும் ஈஸ்ரர் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தினதும் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தினதும் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'ஈஸ்ரர்' கலைநிகழ்வுகளும் இன்றும் நாளையும் மத்தியூஸ் வீதியில் யாழ்.கிறீன் கிங்ஸ் நிலைய தலைவரும், யாழ்.மாநகரசபை உறுப்பினருமான எஸ்.விஜயகாந் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபைமுதல்வர்திருமதியோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மரியன்னை பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாதர் அடிகள், ஜே/75 சுண்டுக்குளி தெற்கு கிராம சேவையாளர் எஸ்.பிறேசிலா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இன்றைய நிகழ்வில் அங்கத்தவர்களுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்ட, கரப்பந்தாட்டப் போட்டிகள், பட்டிமன்றம் ஆகியவை இடம்பெறவுள்ளன.

நாளைய நிகழ்வில் காலை 6 மணிக்கு 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியும், மரதன் ஓட்டப்போட்டியும், 18 தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட அங்கத்தவர்களுக்கிடையிலான 800 மீற்றர் ஓட்டப்போட்டியும், கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணை அடித்தல், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஓட்டப் போட்டி ஆகியவை இடம்பெறவுள்ளன.

அத்துடன்சிறுவர்களுக்கானவிளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும். (ஸ்ரீ-2)

# வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்படும்

## அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் கலாசார உரிமைகளை பிரதிபலிக்கும் வகையிலான வரலாற்று சிறப்புமிக்க பிரதேசங்களை உலக உரிமைகளாக அறிவிப்பதற்கான முனைப்புக்கள் விரைவில் எடுக்கப்படும் என மரபுரிமைகள் அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் காணப்படும் 25 வரலாற்று சிறப்புமிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் உரிமைகளை பறைசாற்றும் வகையிலான பிரதேசங்களை உலக மரபுரிமையாக பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள், கோயில்கள் மற்றும் இறங்குதுறைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் தமிழ் மக்களின் கலாசார உரிமைகளை பறைசாற்றும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும் இவ்வாறான பிரதேசங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் காணப்படும் 25 வரலாற்று சிறப்புமிக்க பிரதேசங்கள் பாதுகாக்கப்படவுள்ளதாக மரபுரிமைகள் அமைச்சர் தெரிவித்துள்ள அதேவேளை இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள அநேக பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் உள்ளிட்ட புராதன சின்னங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# எச்.ஐ.வி.தொற்று குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வு

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

எச்.ஐ.வி தொற்றுக்குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் இதுவரை எச்.ஐ.வி.வைரஸ் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான சுமார் 3 ஆயிரம் பேர் இதுவரை மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணிக்கை சரிவர உறுதி செய்யப்படவில்லை என அமைச்சு கூறுகின்றது.

இதற்கமைய சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியாக இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மதிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விடக் கூடுதலானோர் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இது தவிர சுற்றுலாத்துறையின் வளர்ச்சியுடன் எயிட்ஸ் தொற்றக்கூடிய வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# திருமுறிகண்டி கிராமத்தில் மீள்குடியமர அனுமதிக்கப்படாத 115 குடும்பங்கள் நிர்க்கதி

முல்லைத்தீவு திருமுறிகண்டிக் கிராமத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாமையால் சுமார் 115 குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பொதுஇடங்களிலும் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட திருமுறிகண்டிக் கிராமத்தில் 245 குடும்பங்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

மேற்படி கிராமத்தில் கிராம அலுவலர் பிரிவு அலுவலகம், பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி பொது விளையாட்டு மைதானம், பொது மயானம், கிராமத்தின் பிரசித்தி பெற்ற முனியப்பர் ஆலயம் என்பன கிய பகுதிகளில் இதுவரை மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

இதனால் சுமார் 115வரையான குடும்பங்கள் பொது இடங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் நீண்ட நாட்களாகப் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

திருமுறிகண்டிக்குளம், அதன் கீழ் உள்ள வயல் நிலங்கள், மீள்குடியமர்வுக்கு அனுமதிக்காத பகுதி என சுமார் 250 ஏக்கர் வரையான நிலப்பரப்பு இன்று வரையும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாகாணக்காணி ஆணையாளரால் (464 ஆம் காணி அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (2)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட காணிகளிலேயே இவ்வாறு மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

இதனால் எதுவித தொழில் வாய்ப்புக்களும் இன்றி வாழ்விடங்களும் இன்றிச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் வேதனை தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதில் தாமதம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை சீருடை வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாவதாக அச்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டார்.

இதனால் இதுவரை சீருடை வழங்கப்படாத மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இந்த வருடத்தின் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் முடிவடையும் தறுவாய் வரை பல பாடசாலைகளில் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படவில்லை என்று ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக முறையான விசாரணைகளை நடத்தி மாணவர்களுக்கு சீருடை கிடைக்கச் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்ட அவர், அவ்வாறான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா தெரிவிக்கையில்,

பாடசாலை சீருடைத்துணி வெளிநாட்டிலிருந்தே இதுவரை இறக்குமதி செய்யப்பட்டதுடன் தற்போது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கும் நோக்கில் அதற்கான விநியோகத்தை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சீருடைத்துணிக்கான தேவையின் 50 வீதத்தையே உள்ளூர் உற்பத்தியாளர்கள் பூர்த்தி செய்யக்கூடிய தன்மை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எஞ்சிய 50 வீத சீருடைத்துணியை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் பாடசாலை சீருடைத்துணிக்கு பற்றாக்குறை நிலவுகின்ற ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விரைவில் அவற்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தொடர்கிறாய்

சோகமான என் வாழ்வுக்கு
சொர்க்கமாக நீ வந்தாய்
சோதனையாக வாழ்ந்த போது
வசந்தமாக வந்தாய்
நிம்மதி இழந்த நேரத்தில்
தென்றலாக வந்தாய்

ரி.துளசி, இடைக்காடு

### வேண்டுகோள்

என் உயிர் ஒருவேளை
அந்நிய தேசத்தில்
பிரிந்தால்
என் சவப்பெட்டிக்குள்
என் தேசத்து
ஒரு பிடி மண்ணையாவது
பரப்பி விடுங்கள்
அப்போதுதான்
எனது ஆத்மா
ஆறுதல் அடையும்
இதுதான் எனது
இறுதி ஆசையும் கூட...!

செ.ரவிசாந், குப்பிளான்

### நல்ல நண்பன்

நிஜமாக நிழல் போல
கல்லறை வரையும் தொடரும்
கடவுளின் தூதுவன்!

ந.நவக்குமாரன் கிருத்திகன்
நல்லூர்

### நிலையற்றவை

தோல்விகள் தொடர்வதில்லை
வெற்றிகளும் நிலைப்பதில்லை
வெல்வோம் தோற்போம்
தோற்றபின்னும் எழுவோம்
தடக்கி விழுதல்கள்
தவறுதலானவை தான்
விழுந்ததும் எழுவதுதான்
முன்னேற வழி
ஏற்றம் இருக்குமெனில்
இறக்கமும் உண்டுதானே
இரவு நீள்வதில்லை
விடியல் புலர்கிறது
சோகங்கள் துடைத்தெறிவோம்
தோல்வியையும் திடமாய் ஏற்போம்
வெற்றியும் தோல்வியும்
வீரனுக்கு சகஜம் தானே!

ஆஷா,
யாழ்ப்பாணம்.

### அவரவர் பார்வையில்

**நட்பு**
பள்ளிக் காலத்தில்
எமக்குக் கிடைத்த
மிகப்பெரிய பரிசு
**பிரிவு**
மரணத்தை
விடக்கொடுமையான
ஓர் நிகழ்வு
**சோதனை (பரீட்சை)**
பல வேதனைகளைத்
தாண்டி-மாணவர்களுக்கு
வரும் சோதனை

பொ.இளவரசி
பருத்தித்துறை

**கண்ணீர்**
விழிகளில் இருந்து உதிர்ந்த
விதவைப் பூக்கள்!!
**அதிர்ஷ்டம்**
குழந்தை போல
பிடித்தவர்களிடம் மட்டுமே
ஒட்டிக்கொள்கிறது!

ஆ.பகிர்தா, நீர்வேலி

### ஏக்கப்பெருக்கு

பிஞ்சுக் கனவுகள்
விடைபெற்றுப்போய்
நினைவுகளுடன்
அழுதுபுலம்புகிறது...!
கலாசாரம்
தெருவுக்கு வந்து
அந்தரங்க வித்தைகளை
மேடையேற்றிக்கொள்கிறது...!
பெண்ணியம்
பணத்திற்கு அடிமைப்பட்டு
மனதை மரண சாசனத்தில்
பதிவு செய்கிறது...!
வாழ்க்கை
வறுமையுடன் சுழியோடி
பசியுடன் ஆயுளும்
பரிதவித்து செல்கிறது...!

ஜே.எஸ்.ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்

### உணர்ந்து கொள்

கண்டவுடன் காணாமல்
போவதற்கு –என்
காதல் ஒன்றும்
கானல்நீரல்ல சகியே...
கையுடன் கலந்திருக்கும்
கைரேகைகள்

எஸ்.ரிஷிகேஷன்

### இமயம் தொட...

உன் வாழ்வு
சூனியமாகி விட்டதே
என வருந்துகிறாயா?
வாழ்வல்ல உன் மனமே
சூனியமாகிறது
சூனியமெனும் இருளை
சுட்டெரி வெளிச்சம் வரும்
இருளின் பின்தான்
பூமி விடிகிறது

மாவை. நா.கஜேந்திரா

### கொட்டு முரசே

கொட்டு முரசே! கொட்டு முரசே!
மேதினியில் மேதினமெனக் கொட்டு முரசே!
மனித மனம் மகிழ்வுற
மனிதநேயம் மாண்புற
மதிகெட்டோர் மாண்டிட
மலரட்டும் புதுவழியெனக் கொட்டு முரசே!
சிந்தை கலங்கியோர் சீர்பெற
விந்தை புரிவோம் நாம் என
கந்தை களைந்து கனிவுடனே
சுந்தர அணியுடை அணிந்து
பந்தமுடனே அணிநடை போட
வீறிட்டெழும் பாட்டாளி
விடியலை நோக்கும் விவசாயி
வீரமுடன் ஒளியேற்றும் அறிவாளி
விரட்டுவோம் அறியாமையை என
முழங்கும் மாணவர்
ஏறுநடை போட்டிட
கொட்டு முரசே! கொட்டு முரசே!!

நாபா

## மௌனத்தின் தேடல் – 67



### சுடலை ஞானம்

கட்டிய கண்ணையும்
பொத்திய வாயையும்
குந்தியே காட்டும்
குறுங்காவியத்தை
பிந்தியே பார்ப்போரால்
பயனுண்டோ...?

ஆர். ஜெயா
அராலி

### மாற்றம்

காந்தியின் காலத்து
காட்சிப் பொம்மைகளல்ல
கலியுக காலத்தின்
க(ா)ட்சி பொம்மைகள்

இணுவில் வாசீசன்

### சீர்குலைவு

நாகரிக மோகத்தின்
வலைக்குள் வசப்பட்ட
வாலிபக் கூட்டத்தின்
நிகழ்கால வாழ்வின்
சீர் குலைவின்
வடிவங்கள்

சு.சி.தமிழினி
சுன்னாகம்.

### எடுத்துக்காட்டு

மந்திகள் மூன்று
சிந்தனைத் தெளிவோடு
குந்தியிருப்பது
நவீன உலகின்
அறிவியல் வளர்ச்சிக்கு
நல்லதோர் எடுத்துக்காட்டு

துரை
தென்மட்டுவில்

### உண்மை

மனிதன் பிறந்தது
குரங்கில் இருந்து
இன்று நான்
உணர்கிறேன்
உண்மை இதுவென்று

சிவா

### இவர்கள்

முச்சந்தியில் இருந்து
சேட்டை செய்யும்
இளைஞர்களின்
மூதாதையரோ...?

எஸ்.காவியா
வடமராட்சி

### குருடர்

கடமை என
காட்டிய காவியத்தை
மடைமைஎன நினைப்போர்
கண்ணிருந்தும் குருடே
காதிருந்தும் செவிடே
வாயிருந்தும் ஊமையே...!

கே. ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்.

### ஆற்றல்

ஆறறிவு கொண்டவன்
அறிவுலகுக்குள் அடைபட்டதுவே
இந்த மந்திகள் -இல்லை
அவனை விஞ்சியதுவோ?

ஜே.கீர்த்தனன்
பருத்தித்துறை

### இப்படியுமா?

தொடர்பு சாதனங்கள்
மனிதர்களிடம் தான் புகுந்து
விளையாடும் என்றால்
அவை மந்திகளையும் கூட
விட்டுவைக்கவில்லை!

றூபி விமலதாஸ்,
நவாலி

### புதிய விதி

நல்லவற்றை பார்
நல்லவற்றை கேள்
நல்லவற்றை பேசு

பா.நியூட்டன் சதிஷ்
மீசாலை

### நாகரிகம்

ஆளுக்கொரு தொலைபேசியும்
நாளுக்கொரு நடப்பும்
நம் நாட்டின் இன்றைய
நாகரிகமானது
இது உங்களுக்குமா
புரிந்து விட்டது...?

சிவதர்ஷி
ஏழாலை வடக்கு

### ஏக்கம்

நீங்கள் கூட
உற்று அவதானிக்கிறீர்களே
ஏக்கத்துடன்
சர்வதேசம் என்ன
சொல்லப் போகிறதென்றா?

ரது


### சுதந்திரம்

மந்தியிடம் இருந்து தான்
மனிதன் பிறந்தானாம் ஆனால்
உங்களுக்கு உள்ள சுதந்திரம்
எங்களுக்கில்லையே!

அ.புவனவதி
வடவரணி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 68

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.04.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# 'கர' வருடம் உங்களுக்கு எப்படி?




(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

*காகவாகனம் கொண்டவனை*
*கனிந்தே தொழுதால் குறை தீரும்*

*எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும் இயல்பைப் பெற்ற மீன இராசி நேயர்களே!*

விக்ருதி வருடம் முடிந்து கரவருடம் தொடங்கியுள்ளது. வியாழன் உங்கள் இராசிக்கு அதிபதியாக விளங்குவதால், ஆண்டின் தொடக்கத்தில் சகட யோகமும், குருமங்கல யோகமும் ஏற்படுவதால், சென்ற ஆண்டைக் காட்டிலும் சிறப்பான ஆண்டாக இந்த ஆண்டு அமையப் போகிறது.

இராசிநாதன் உச்சம் பெற்றிருந்தால் அல்லது ஆட்சி பெற்றிருந்தால் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும் என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் குரு பலம் பெற்று விளங்கினாலும், மாபெரும் கிரகம் சனியல்லவா உங்கள் இராசியைப் பார்க்கிறது. கண்டகச் சனியாக விளங்கி கவலைகளைக் கொடுக்கும் சனி வக்ரமடையும் காலத்தில் மட்டும் வாழ்க்கைப் பாதையில் நல்லதைச் செய்யும்.

இந்த ஆண்டு முறையான குருப் பெயர்ச்சி நடைபெறப் போகிறது. தனஸ்தானத்தை குரு பார்க்கப் போகிறார். எனவே பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். இனம்புரியாத கவலை இருந்த இடம் தெரியாமல் ஓடி மறையும்.

இராகு- கேது பெயர்ச்சியும் ஓரளவு நற்பலன்களையே வழங்கும். பொதுவாக 10இல் வந்த இராகு, இனி 9 இல் சஞ்சரிக்கப் போகிறார். 4 இல் உள்ள கேது இனி 3 இல் சஞ்சரிக்கப் போகிறார். இவையெல்லாம் உங்களுக்கு நற்பலன்களைக் கொடுத்தாலும் மார்கழி மாதம் பெயர்ச்சியாகப் போகும் சனி உங்களுக்கு அஷ்டமத்துச் சனியாக அல்லவா மாறப் போகிறார்.

எனவே, மார்கழிக்கு முன்னால் மனதிற்கினிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெற்றாலும் மார்கழிக்குப் பின்னர் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. திடீர் மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் உருவாகலாம்.அந்நியரின் தொல்லை அதிகரிக்கும் இந்த நேரத்தில் அடுக்கடுக்காக வரும் சிக்கல்களைப் போக்க ஆனை முகனையும் ஆஞ்சநேயரையும் சனீஸ்வரரையும் விடாது வழிபட்டுவருவது நல்லது. பொதுவாக விடிந்தால் விக்னேஸ்வர வழிபாடு என்று வைத்துக் கொண்டவர்களுக்கு சனிபகவானால் சஞ்சலங்கள் ஏற்படாது.

இல்லத்தில் காகத்திற்குத் தினமும் சோறு வைப்பதன்மூலம், மாற்றுத் திறனாளிகளுக்கு மனமுவந்து உதவி செய்வதன்மூலமும் தல யாத்திரைகளை மேற்கொண்டு ஆண்டவனின் சந்நிதியில் அதிக நேரம் வழிபாடு செய்வதன்மூலமும் அஷ்டமத்துச் சனியின் வலிமையை குறைக்க முடியும்.

சனி ஆதிக்கம் நடைபெறும்போது நம்பிக்கைக்குரியவர்கள் கூட விட்டு விலகலாம். எனவே, எல்லோரிடமும் அன்பு காட்டி அரவணைத்துச் செல்வதன்மூலமும், கோபத்தைத் தவிர்த்துக் குணத்தோடு செயற்படுவதன் மூலமும் தொல்லைகளில் இருந்து விடுபட இயலும்.

**விருந்தினர்களை சிறப்பாக உபசரிப்பவர்கள் நீங்கள்!**

வந்தவர்களை உபசரிப்பதில் உங்களுக்கு ஈடு இணை யாருமே இல்லை.சொந்தம், சுற்றம் என்று பாசம் காட்டுவதில் 12 இராசிகளிலும் நீங்கள் தான் முதன்மையானவர். குரு என்பவர் நவக்கிரகத்தில் சுபக்கிரகமாக வர்ணிக்கப்படுபவர். அவரது சொந்த வீடு உங்களுக்கு இராசியாக அமைவதால் சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகம் பெற்றவர்களாக விளங்குவீர்கள்.

நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக இருக்கும். மற்றவர்கள் செய்யும் தவறுகளைப் பெருந்தன்மையோடு மன்னிக்கும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு. கற்ற கல்வியைக் காட்டிலும் பெற்ற அனுபவங்கள் தான் பெரிதும் வழிநடத்திச் செல்கின்றன.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

கர வருடத் தொடக்கத்திலேயே 8.5.2011அன்று குருப்பெயர்ச்சி நடைபெறப் போகிறது. இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்குச் சாதகமான பலன்களை அள்ளி வழங்கப் போகிறது. பொதுவாக இராசிநாதனாகவும் 10க்கு அதிபதியாகவும் விளங்கும் குரு தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரும்.

இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 6,8,10 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப் போகின்றன.

*"இரண்டில் குரு வந்தால்*
*இல்லத்தில் மகிழ்ச்சி வரும்*
*திரண்ட செல்வமுடன்*
*தேனான வாழ்வமையும்*
*உறவினர் பகைமாறி*
*உற்சாகம் குடி கொள்ளும்*
*குருவின் வழிபாட்டால்*
*குதூகலமாய் வாழ்ந்திடலாம்"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இரண்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேர்வர். பங்காளிப்பகை மாறும். தங்கு தடையின்றி தனவரவு வந்து கொண்டேயிருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள்.

கொடி கட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவுக்கு வரும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறத் தொடங்கும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நிகழ்காலத் தேவை பூர்த்தியாகும்.அரசு அதிகாரிகளும் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வர். செவ்வாய் ஆதிக்கம் பெற்ற நாளில் திசை மாறிய தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வந்தால் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும்.

**இராகு-கேது பெயர்ச்சிக்காலம்!**

பாம்புக் கிரகம் என்று வர்ணிக்கப்படும் இராகுவும் கேதுவும் மே மாதம் 11ஆம் திகதி பெயர்ச்சியாகிறார்கள். இந்த அரவுக் கிரகப் பெயர்ச்சியால் ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. உடன்பிறப்புகளும் ஒத்துழைப்புச் செய்வர். உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்கள் உங்களை விட்டு விலகுவர். வள்ளல் தன்மை மிக்கவர்கள் உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வர்.

9இல் சஞ்சரிக்கும் இராகு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடுவார். பொன், பொருட்களை வாரி வழங்குவார். புதிய திருப்பங்களை ஏற்படுத்துவார். அன்புத் தந்தையின் பாசத்தை அதிகரிக்க வைப்பார். 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது முன்னேற்றத்தில் சில இடையூறுகளைக் கொடுத்துத்தான் நிவர்த்தி செய்வார். எந்தக் காரியமும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்ய இயலாது. இடையில் தடை ஏற்பட்டுத்தான் முடியும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளையும் யாகங்களையும்செய்தால் தேக நலனும் சீராகும்,செல்வ நிலையும் உயரும்.

**அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம்!**

இதுவரை 7 ஆம் இடத்தில் இருந்த சனிபகவான் 21.12.2011 முதல் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை 12ஆம் இடத்திற்கு சனி அதிபதியாவதால்,அது 8இல் சஞ்சரிக்கும் போது விபரீத ராஜ யோகத்தை உருவாக்கலாம். **கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்** என்பது பழமொழி.

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குத் திடீர் திடீரென்று உதவ முன்வருவார்கள். விலையுயர்ந்த பொருட்களைக் கையாள்வதில் கவனம் தேவை. விழிப்புணர்ச்சி கூடுதலாக இல்லாவிட்டால் பங்குதாரர்களிடம் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடலாம். மருத்துவச் செலவு கூடும். நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேற சனிக்கவசம் பாடி சனீஸ்வரரை முறையாக வழிபாடு செய்யுங்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ரகாலங்கள்!**

ஆண்டின் தொடக்கத்திலேயே சனி வக்ரம் பெறுகிறார். அதற்குப் பின்னால் மீண்டும் இரண்டு முறை வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலத்தில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவதே நல்லது. பொதுவாக இலாபம் வருவதில் தடைகள் ஏற்படலாம். பயணங்கள் அதிகரித்தாலும் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.பிறருக்குப் பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

31.08.2011 முதல் 15.12.2011 வரை குருவின் வக்ரகாலம். இக்காலத்தில் ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். ரண சிகிச்சைகள் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரம் இது. நண்பர்களைச் நம்பிச் செய்யும் காரியங்கள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். உறவினர் வழியில் பகை வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்பச் செலவுகள் கூடும்.

**பலன்தரும் பரிகாரம்**

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து தென்முகக்கடவுளை இன்முகத்தோடு வழிபட்டு வருவது நல்லது.

(முற்றும்)

## சிவல்புரி சிங்காரம்








யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய பழைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் கட்டுமரம் வலித்தல் போட்டிக்கு தயாராகுவதையும் கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வையும் வீதியோட்டப் போட்டி யில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பழைய மாணவர்களையும் படங்களில் காணலாம்.



இந்த ஆண்டு இலங்கை வந்த 250000 ஆவது சுற்றுலாப் பயணியாக நெதர்லாந்து குடும்பம் ரோனக் நோடியஸ் கடந்த 20-ம் திகதி கட்டுநாயக்கவை வந்தடைந்தனர். இவர்களை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் மல்ராஜ் கிரில வரவேற்பதை படத்தில் காணலாம்.

# இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி 13-வது தடவை தெரிவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிதித்துறை வெளியீடான குளோபல் பினான்ஸ் சஞ்சிகை கொமர்ஷல் வங்கியை இலங்கையின் சிறந்த வங்கியாக தொடர்ச்சியாக 13ஆவது தடவையாக தெரிவு செய்துள்ளது.

1987-ம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சஞ்சிகை 163 நாடுகளில் 50 ஆயிரம் பிரதிகள் விநியோகத் தளத்தைக் கொண்டுள்ளது.

இதேவேளை கொமர்ஷல் வங்கி 2010 டிசம்பர் 31-ல் முடிவுற்ற நிதியாண்டில் 5.523 பில்லியனை நிகர லாபமாக பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# அதிகரிக்கும் தங்கத்தின் விலை

உலக சந்தையில் தங்கத்தின் விலை இதுவரையில்லாத வகையில் புதிய உயரத்தை எட்டியுள்ளது.தற்போது ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை அயிரத்து 500 டொலர் என்ற நிலையில் உள்ளது. அதாவது ஒரு கிராம் தங்கம் 50 டொலர்கள் விலை போகிறது.

செல்வந்த நாடுகளின் அரசாங்க கடன்கள் குறித்து கவலைகள் அதிகரித்து வருவதே தங்கத்தின் விலையேற்றத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது. அரசாங்க உத்தரவாதப் பத்திரங்கள், செல்லந்த நாடுகளின் கடன் பத்திரங்கள் போன்ற மற்ற விடயங்களில் தாங்கள் செய்த முதலீடுகள் பலன்தராமல் போகலாம் என்ற கவலை ஏற்படும் நேரத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் பலர் தமது பணத்தை தங்கத்தில் முதலீடு செய்வது பாதுகாப்பானது என்று கருதுகின்றனர்.

**ஐரோப்பிய கடன் நிலை**

ஐரோப்பாவைப் பொறுத்த வரை, கிரேக்கம் தான் திருப்பி செலுத்த வேண்டிய சர்வதேச கடன்களை திருப்பி செலுத்தாமல் போக வாய்ப்புள்ளது என்ற சந்தேகங்களும் ஊகங்களும் அதிகரித்து வருகின்றன.

ஐரோப்பாவின் மற்ற நாடுகளும் தாங்கள் வாங்கக்கூடிய சர்வதேச கடன்களின் அளவை கட்டுப்படுத்த முடியாது போகலாம் என்ற ஐயம் நிலவுகிறது.

**அமெரிக்காவின் சர்வதேச கடன்கள்**

தவிர தற்சமயம் அமெரிக்காவின் சர்வதேச கடன்கள் குறித்த கவலைகளும் அதிகரித்துள்ளன.

அண்மையில் அமெரிக்காவின் சர்வதேச கடன்களின் எதிர்காலம் குறித்து கடன் பெறுவதற்கான தகைம்மை குறித்து மதிப்பீடு செய்யும் நிறுவனம் ஒன்றுஎச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

இது அமெரிக்காவின் சர்வதேச கடன்களின் நிலை தொடர்பான கவலைகளுக்கு வலு சேர்த்துள் ளது.

கடனை திருப்பி செலுத்துவதற்கான தகைமையை பொறுத்தவரை முதல் தரமான AAA வை அமெரிக்கா இதுவரை இழக்கவில்லை என்றாலும், அத்தரத்தில் இருந்து அது கீழ்இறங்கி விடுவதற்கான வாய்ப்பு எழுந்துள்ளது.

அமெரிக்கா இந்த தரத்தில் இருந்து இறங்குகிறது என்றாலே, தான் திருப்பி செலுத்தவேண்டிய சர்வதேச கடனை அமெரிக்காவால் திருப்பி செலுத்த முடியாமல் போகும் என்று அர்த்தம் இல்லை.

ஆனால் பணவீக்கம், டொலரின் மதிப்பு குறைதல், அரசுஉத்தரவாதப் பத்திரங்களின் விலை வீழ்ச்சி போன்றவற்றால் அமெரிக்க அரசு உத்தரவாதப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டவர்கள் நஷ்டம் அடையலாம் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த பின்னணியில் தான் , தங்கத்தில் முதலீடு செய்வதென்பதில் வர்த்தகர்களின் கவனம் குவிகிறது. என்றும் தங்கம் அதனால் தொடர்ந்து விலை ஏறி வருகிறது என்றும் கூறப்படுகின்றது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7574.86 | 7456.82 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7064.25 | 6947.11 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,718.19 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** பரஹன் (1012.50),பிறின்ஹெயர் பிஎல்சி (295.40),ஹ்ஜே (240.40),மிரமர் (265.30),ஹெஸ்னர்(407.10).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** ஈ-சனலிங் (3.90),சிங்கலங்கா (1304.20),யூனியன் கெமிக்கல்(868.30),சல்மர் (780.00),புளூ டைமன்ட்ஸ் (1.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# ஊ. சே. நிதியத்தின் மொத்த சொத்துப் பெறுமதி அதிகரிப்பு

ஊழியர் சேமலாப நிதியத்தில் உள்ள மொத்த சொத்துப் பெறுமதி கடந்த ஆண்டில் 899.7 பில்லியன் ரூபாயாகஅதிகரித்துள்ளது.இது முன்னைய ஆண்டில் 769.7 பில்லியன் ரூபாயாக காணப்பட்டதோடு 2010இல்16.9சதவீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இதேபோல் ஊழியர் சேமலாப நிதியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 12.8 மில்லியனில் இருந்து கடந்த ஆண்ணடில் 13.3 மில்லியனாக அதிகரித்தள்ளது.இது 3.9 சதவீத அதிகரிப்பாகும்.

இதேவேளை கடந்த ஆண்டில் 121.3 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஊழியர் சேமலாப நிதியம் ஈட்டிக் கொண்டுள்ளது.இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீத அதிகரிப்பு என இலங்கை மத்திய வங்கி அண்மையில் தெரிவித்திருந்தது.

தற்போது வங்கி வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள் மிகக் குறைவாக உள்ள நிலையில், ஊழியர் சேம லாப நிதியத்தில் உள்ள வைப்புக்களுக்கு 12.5 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.

எனினும் மத்திய வங்கியால் தற்போது முகாமை செய்யப்பட்டு வரும் நிதியத்தின் சொத்துக்கள் பங்குச்சந்தையில் முதலிடப் படுவது தொடர்பாக விமர்சனங்களை பொருளியலாளர்கள் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

CENTRAL BANK OF SRI LANKA

EMPLOYEES' PROVIDENT FUND

# ஒரு மில்லியன் ஸ்பென்ஸ் பங்குகளை 165 மில்லினுக்கு ஈபிஎவ் வாங்கியது

ஒரு மில்லியன் அற்கின் ஸ்பென்ஸ் பங்குகளை ரூ.165.5 மில்லியனுக்கு ஊழியர் சேமலாப நிதியம் (EPF) கடந்த வாரம் கொள்வனவு செய்துள்ளது.

இதன் மூலம் அற்கின் ஸ்பென்ஸின் 4.5 சதவீத பங்குகளை ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ளது.

# எச்.என்.பி. ரூ.690 மில்.க்கு 2.6% என்.டி.பியை வாங்கியது

இரண்டாவது பெரிய தனியார் வங்கியான எச்.என்.பி.கடந்த வாரம் ரூ.690 மில்லியன் செலுத்தி என்டி வங்கியின் 2.6% பங்குகளை கொள்வனவு செய்துள்ளது.அதாவது 4.2822 மில்லியன் பங்குகளை ரூ.161.20 படி வாங்கியது.இதன் மூலம் என்டிபியின் உள்நாட்டின் 5-வது பெரிய பங்குதாரராக எச்.என்.பி மாறியுள்ளது.

# ஐ.எம்.எப். அடுத்த தலைவர்?



சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தலைவராக இந்தியர் அல்லது சீனாவைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப் படலாம் என்று இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இதுவரை சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்)தலைவராக இருந்து வந்துள்ளனர்.இப்போது தலைவராக இருக்கும் டொமினிக் ஸ்ட்ராஸ் கான் பிரான்ஸை சேர்ந்தவர்.இவரது பதவிக் காலம் விரைவில் முடிகிறது. இதையடுத்து புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. இந்நிலையில் ஐ.எம்.எப். இன் புதிய தலைவராக இந்தியா அல்லது சீனாவைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப் படலாம் என்று இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.45 | 111.19 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 179.25 | 183.54 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.51 | 162.96 |
| சுவிஸ் பிராங் | 122.21 | 126.59 |
| கனேடிய டொலர் | 114.44 | 118.30 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.72 | 120.19 |
| சிங்கப்பூர் டொலர் | 87.92 | 90.53 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.36 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.50 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.03 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட பங்குச்சந்தையில் முதலீடுவோர் அறிந்திருக்க வேண்டியவை

## வழிகாட்டி நூலை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிப்பு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை "புதிய முதலீட்டு வாய்ப்பு -புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை "எதிர்காலத்திற்கான முதலீடு எனும் முதலீட்டு வழிகாட்டி நூல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை -யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் மு.திலீபனால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

*அந்நூலில்*- பங்குகளில் முதலீடு செய்ய முன்னர் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை யாவை?

முதன்முதலாக பங்குகளில் முதலீடு செய்வோர் அறிந்திருக்க வேண்டியவை?

நாம்பங்குகளில் முதலிடத்தயாரெனில்,எப்போது ஆரம்பிக்கவேண்டும்?

பங்கு முதலீட்டில் பங்குத் தரகரின் பங்கு என்ன?

ஆரம்ப பங்கு வழங்கல் (IPO) என்றால் என்ன?எப்படி ஐ.பி.ஓ வின் போது பங்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும்?

பங்குச்சந்தையில் பங்குகளை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் நடைமுறை ?

பங்குத் தரகரை எவ்வாறு கண்டு கொள்வது ?

பங்குப் பரிமாற்றங்களின் போது பணக் கொடுக்கல்வாங்கல்கள் எவ்வளவு தூரம் பாதுகாப்பானது ?

பங்குதாரர்களின் உரிமைகளும் நலன்களும்?


ஏன்பங்குகளின்விலைகள்அதிகரிக்கின்றன அல்லது குறைகின்றன?

பங்கு முதலீட்டு தீர்மானத்திற்கு தகவலின் முக்கியத்துவம்?

பங்குச் சந்தையில் பாவிக்கப்படும் சொற்பதங்களின் விளக்கம் உட்பட பல விடயங்களை மேற்படி வழிகாட்டி நூல் தாங்கி வந்துள்ளது.

33 பக்கங்களுடன் அழகிய பக்க வடிவமைப்புடன் வெளிவந்துள்ள மேற்படி நூலை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் இல.398/1 ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளையுடன் தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன்மேற்படிநூல்பங்கு முதலீட்டுக்குத் தேவையான பல அடிப்படை விடயங்களை தொட்டுச் செல்கின்றது.இந்நிலையில் பங்கு முதலீடு தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள விரும்புவோர் 0212221455 / 0215672444 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என திலீபன் மேலும் தெரிவித்தார்.



# ஆனந்த அலை



### தவறான அடையாளம்

வெளியிலிருந்து சேர்த்த உடலையே 'நான்' என்றுதானே உணர்கிறீர்கள்? சாம்பவி மகாமுத்ரா பயிற்சி செய்யும்போது உங்களுக்கும், உடலுக்கும் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. இது மிகமிக முக்கியமானது. எது 'நீங்கள்' இல்லையோ, அதை 'நான்' என்று நினைத்துக் கொள்ளும்போது, நீங்கள் பைத்தியம்தான். உதாரணமாக ஒரு இரும்புக் கம்பத்தினை நீங்கள் சிறிதுநேரம் பிடித்திருந்துவிட்டு, சிறிதுநேரத்தில், 'நான்தான் இந்தக்கம்பம்' என்று நினைத்துவிடுகிறீர்கள் என்றால், மக்கள் உங்களைப்பற்றி என்ன கூறுவார்கள்? இவருக்கு கம்பத்தின்மீது அன்பு ஏற்பட்டுவிட்டது என்று கூறுவார்களா? அல்லது 'இது பைத்தியம்' என்று கூறுவார்களா? இது ஒருவிதமான பைத்தியம்தானே?

எப்பொழுது இந்தப்பைத்தியக் காரத்தன்மை ஏற்பட்டுவிட்டதோ, அப்பொழுது நீங்கள் உங்களுடைய உடலையோ, மனதையோ, சக்தி நிலையையோ எதனையுமே முழுமையாக உபயோகிக்க முடியாது. உங்களுடைய திறமையையும், புத்திசாலித்தனத்தையும் வளர்த்துக் கொள்ளமுடியாது. உங்களுடைய பிழைப்பிற்குத்தேவைப்படுகின்ற செயலைக்காட்டிலும் அதிகமாக உங்களால் எதையும் செய்ய இயலாது. பிழைப்புமட்டும் நிகழும்.

இந்தியதேசத்தில் நூறுகோடிக்கும் அதிகமான மக்கள்தொகை இருக்கின்ற நிலையில் நூறுகோடி மக்களும், தங்களது திறமையை முழுமையாக உபயோகப்படுத்தினால், பிரமாதமான வகையில் முன்னேற்றம் காணமுடியும். கூடுதல் சனத்தொகையை நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் ஒரு விடயமாகத்தான் நாம் நோக்குகின்றோம். ஏனென்றால் திறமையை உபயோகப்படுத்தாது, வளர்ச்சிகாணாத சனத்தொகை தேசத்திற்கு சுமையாகும் போது அது பாதிப்பாகத்தான் இருக்கும். முழுமையாக மலர்ந்த சனத்தொகையினர் நூறுகோடி மக்கள் இருந்தால், இந்த உலகமல்ல, பிரபஞ்சத்தையே நம் கைகளில் எடுத்துக்கொள்ளமுடியும். அந்த அளவிற்கு மனிதனிடம் அபாரமான திறமை இருக்கிறது.

ஆனால் எது நாம் இல்லையோ அதனுடன் நமக்குஅடையாளம் வந்துவிட்டதால் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது உங்களுடைய அடையாளம் உடலுடன் மட்டும் என்றில்லை. கணவன் , மனைவி, குழந்தை, வீடு, சொத்து மேலும் எதனுடன் எல்லாமோ உங்களுக்கு அடையாளம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது உங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்றால், நான் உங்களை அடிக்கத் தேவையல்லை. உங்கள் அடையாளங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்திவிட்டால் போதும். உங்களுக்கு மாரடைப்பே வந்துவிடும் அப்படித்தானே உள்ளது?

எது 'நீங்கள்' இல்லையோ, அதனுடன் உங்களுக்கு எப்பொழுது அடையாளம் வந்துவிட்டதோ, அப்பொழுது உங்கள் திறமை, புத்திசாலித்தனம், நீங்கள் செய்கினற செயல்கள் அனைத்துமே பிழைப்புக்குத்தான் உதவுமே தவிர அதைத்தாண்டி வேறு மகத்தான எதுவும் மலருவதற்கு வாய்ப்பில்லாத சூழல் ஏற்பட்டுவிடுகிறது. உலகமக்கள் இப்பொழுது இந்தவிதமான ஒரு அடையாளச் சிக்கலில் சிக்கிப்போய் இருக்கின்றனர்.

எப்பொழுது உங்களுக்கு அநேக விடயங்களுடன் அடையாளம் வந்துவிட்டதோ அப்பொழுது அறிவு வேலை செய்யாது. உங்களுடைய உடல், மனம், புத்தி எதுவுமே முழுமையான திறமையுடன் செயற்படாது. இங்கு மனிதனாக உருவெடுத்து வந்ததன் காரணம் வெறுமனே சம்பாதித்து உண்டு, களித்து, இனவிருத்தி செய்துவிட்டு பிறகு ஒருநாள் இறந்துபோய்விடுவதற்காக வரவில்லை.

இந்த மனிதத்தன்மைக்கு ஒரு கணம் அமர்ந்தாலே, இந்த முழுமையான பிரபஞ்சத்தையும் தனக்குள்ளே உணரக்கூடிய சக்தி இருக்கின்றது. இந்த மகத்தான சக்தி வளர வேண்டுமென்றால், பிரபஞ்சத்தை உள்நிலையில் உணரவேண்டுமென்றால், இந்த ஓர் 'உயிர்' என்பதை உயிராக மட்டும் கவனம் கொள்ளவேண்டும். இந்த உயிரை உடல் என்று எண்ணக்கூடாது. இந்தஉயிர் மனைவியாக ஆகக்கூடாது.இந்த உயிர் கணவனாக ஆகக்கூடாது. இந்த உயிர் எது இல்லையோ அது ஆகக்கூடாது.

வாழ்க்கையில் இந்தப் பாத்திரங்களையெல்லாம் ஏற்று, அந்தந்தச்சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் செயற்படலாம்.கணவன் என்கிற பாத்திரம் ஏற்கலாம்.மனைவி என்கின்ற பாத்திரம் ஏற்கலாம் அண்ணாவாகவும், தம்பியாகவும் அனைத்துவகையான பாத்திரங்களையும் ஏற்கலாம். ஆனால், அந்த அடையாளத்தில் நாம் அதுவாகவே ஆகிவிடக்கூடாது. இந்த உயிர் என்பதை உயிராக மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## ஆன்மீகம் 34

ஆனந்தம் என்பது எனது போதனை இல்லை. உயிரே ஏங்குகிற ஒரு அடிப்படை. நான் சொன்னதால் நீங்கள் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற தேவையில்லை. உயிரே ஆனந்தத்திற்காக ஏங்குகிறது. உயிர் ஏன் ஆனந்தத்திற்காக ஏங்க வேண்டும் என்றால் உயிரின் அடிப்படையே ஆனந்தம்தான். உலகத்திலுள்ள மற்றமதங்களிலும், கலாசாரங்களிலும் கடவுளைப் பலவிதமாக விபரித்தார்கள். கடவுள் என்றால் அன்பு என்றார்கள். அதிகரம் என்றார்கள். ஆனால் இந்த ஒரேஒரு கலாசாரத்திற்கான கடவுள் என்றால் ஆனந்தம் என்று சொன்னார்கள். 'பிரம்மானந்தம்' என்று சொன்னார்கள். கடவுள் அடிப்படையே அனந்தம் என்று சொன்னார்கள்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பெண்ணிலைவாதம் தொடர்பான கோட்பாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

**01**

17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் மேலைநாடுகளில் வளர்ந்து வரும் பெண்ணிலைவாதம் இந்த இரண்டு நூற்றாண்டுகளில்தான் இந்தியச்சிந்தனையிலும் ஒரு புதிய இடம்பெற்று வளர்ந்துவருகிறது. பெண்ணிலைவாதம் என்பதும் அதன் கோட்பாடுகளும் ஒரு சமூக மாற்றத்திற்காக எடுக்கப்படும் நடவடிக்கையாகும். இதனைப் பெண்களின் சீர்திருத்த அலைகளை உருவாக்கும் பெரியசமுத்திரம் எனலாம். பெண்ணிலைவாதம் என்ற சொல் முதலில் 17ஆம் நூற்றாணடில் பயன்படுத்தப்பட்டது. அன்றிருந்த பொருள் இன்று மாறுபடுகின்றது. வர்க்கப் பின்னணி, கல்வித்தகைமை, உணர்வு நிலை போனறவற்றைப் பொறுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு வகையாகப் பேசப் படுகிறது.

ஆண்மேலாதிக்கம் ஒழிந்து ஆணாதிக்சமுதாயம் மாற்றியமைக்கப்பட்டு, பால்ரீதியான ஒடுக்கு முறைகளும் நசுக்கப்பட வேண்டும். குடும்ப அமைப்பிலான பங்கு நிலையும் பாதிக்கப்படக்கூடாது. இது போன்ற கருத்தியல்களை யெல்லாம் இனங்கண்டு தீர்வு காணமுயலும் தன்மையே பெண்ணிலைவாதமாகும். பெண் மெல்லியள், வீடே அவளுக்குரிய பாதுகாப்பான இடம் என்ற 'காப்பை' கண்ணுக்குத் தெரியாத விலங்கை உடைத்தெறிய வழி வகுப்பதே பெண்ணிலைவாதத்தின் இன்றியமையாப் பணியாகிறது.

பெண்ணுரிமைப்போராட்டம் ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் கால்கொண்டது. 1789இல் பிரஞ்சுப்புரட்சியின்போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மனித உரிமைக்குரல்களோடு பெண் சமத்துவத்திற்கான கோரிக்கைகளும் ஒருங்கிணைந்து எழுச்சி பெற்றன. இக்கால கட்டம் அறிவியல் உலகமென அழைக்கப்படுகிறது. தீவிர தேடல்கள், ஆராய்ச்சிகள்யாவும் மக்களைப் பகுத்தறிவுப்பாதையில் இட்டுச்சென்றது. இதனால் பெண்களின் உரிமைக்காகப் பலர் கண்டனக்குரல் எழுப்பினர் 1848இல் பெண்ணுரிமை பற்றிய முதல் அறிக்கை

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

செனிகா பால்சில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் வெளியிடப்பட்டது. "Feminine My stique" என்னும் நூலை எழுதி பெண்ணியத்தை முன்வைத்தனர். டாக்டர் தேவதத்தா வேறு கோட்பாடு களைப் போல பெண்ணியத்தின் கருத்தியல் ரீதியான தளத்தைத் தனிக்கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. எல்லாக் காலத்தும் எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும் ஒரு பொதுவான வரையறையை இதில் திணிக்க முடியாது. பார்வைகள், கலாசாரப் பிரிவுகள்,நடைமுறைக்கேற்ப மாற்றங்கள் என வரையறையானது மாற்றமடையக்கூடும் எனகின்றார். இத்தகைய பெண்கள் அடிமை வாழ்க்கை வாழ்வதைக் கண்டித்துப் பல பெண்ணியவாதிகள் தோன்றி பல பெண்ணியக்கருத்தியல்களை முன்வைத்து உழைத்தனர்.

பெண்களுக்கிடையிலான அசமத்துவ உறவு, அவை சமூகத்தில் வெளிப்படும் உறவுகள், சமூகப் பொருளாதார, கலாசார தடயங்கள், அசமத்துவக்காரணிகள் என்பவை தொடர்பான பொதுமையான கருத்துக்கள் இந்தச்சிந்தனைகளில் காணப்படுகின்றன. பெண்ணிலைவாதச் சிந்தனைகள் அனைத்தையும் ஒன்று எனக்கூறமுடியாது. அசமத்துவ வளர்ச்சிக்கான தோற்றம், உருவாக்கத்துக்கான காரணம், அசமத்துவத்தை நீக்குவது ஆகியவற்றிற்கான வழிமுறைகள் குறித்தும் பெண்ணிலைவாதிகளுக்கிடையே வேறுவேறான கருத்துக்கள் நிலவுகின்றன. சமத்துவமின்மையைப் புரிந்துகொள்கிற முறையிலும், எவ்வாறு சமத்து வத்தை அடைவது என்ற முறையிலும் வேறுபாடுகள் காணப்படும். ஆகையினால்தான் இன்றைய நிலையில் பெண்ணிலைவாதக் கோட்பாடுகளை 'நடந்துகொண்டிருக்கின்ற' விவாதங்கள் என்று சிலர் கூறுவர்.

பெண்விடுதலைக்கான விதிமுறைகளை அணுகும்போக்கில் பெண்ணிய இயக்கங்கள் தம்முள் வேறுபட்ட கருத்தினையுடையனவாய் அமைந்தன. பல்வேறு பிரிவுகள் இருந்த போதிலும் அவற்றுள் மிகப்பரவலானதும், முக்கியத்துவம் பெற்றதுமான நான்கு கோட்பாடுகள் பெண்ணிலைவாதம் பல பரிமாணங்களோடு வளர்ந்ததைக் காட்டுகிறது. அதை தாராண்மைவாதக் கோட்பாடு (Liberal Feminism) மாக்ஸிஸ

**எம்.பகீரதி**

பெண்ணிலைவாதம் (Marxist Feminism) சமூகப் பெண்ணிலைவாதம் (Radical Feminism) எனப்படும். தாராண்மைவாதக் கோட்பாடானது ஆரம்பகாலப் போராட்டமாகும், இது 18ஆம் நூற்றாணடில் மேல்நாடுகளில் பகுத்தறிவுக்காலம் ஆரம்பித்த போது பிறந்தது.

(தொடரும்)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்க போவதில்லை

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளிலும் பங்கேற்க போவதில்லை என உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் உறுப்பினர் எச். எம். பலிஹக்கார, நிபுணர்குழு அறிக்கைக்கு பதிலளிக்கும் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிப்பதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழு உறுப் பினர்கள் பதிலளிப்பது பொருத்தமாகாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட்டு வருவதாகவும் அதன் உறுப்பினர்கள் வேறு ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பது பொருத்தமாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வேட்பாளர்களாக களமிறங்கிய அரச ஊழியர்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

நிறுவனங்கள் சட்டக் கோவை விதிமுறைகளை மீறும் வகையில் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கிய அரச ஊழியர்கள் குறித்து விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் பணிப்புரைக்கமைய இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

நிறுவன சட்டக் கோவை மற்றும் தேர்தல் சட்டம் என்பவற்றின் பிரகாரம் நிர்வாக தரத்திலுள்ள அரச ஊழியர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதாயின் அவர் அரச சேவையில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பி.சுமனசிறி சுட்டிக்காட்டியுள்ளார். நிர்வாக மட்டத்தில் அல்லாத அரச ஊழியர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதாயின் அவர் விடுமுறையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

எனினும் கடந்த தேர்தலில் இந்த சட்டங்கள் மீறப்படும் வகையில் பல அரச ஊழியர்கள் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட ஒருசில அரச ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான அரச ஊழியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு விபரமாக அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் கூறியுள்ளது.

(ஸ்ரீ-2)

# அமைச்சர் றிசாட் பதியுதீன் முல்லைத்தீவுக்கு விஜயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளியவளை பூதன் வயல் கிராம மக்களின் காணிப் பிரச்சினை குறித்து அமைச்சர் றிஷாட் பதியுதீன் கலந்துரையாடியுள்ளார்.

நடைபெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் அங்கு விஜயம் செய்துள்ள கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் காணிப்பிரச்சினை தொடர்பாக இம் மக்களிடம் கேட்டறிந்ததோடு இது தொடர்பாக ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு பிரதேச செயலாளர் எஸ். தயானந்தனுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தோடு நீண்ட காலத்தின் பின் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களையும் சென்று பார்வையிட்ட அவர் அவர்களின் குறைகளையும் கேட்டறிந்தார். (ஸ்ரீ-4)

# ராஜ் ராஜரட்ணம் மீதான வழக்கு திங்கள் நிறைவு

(கொழும்பு)

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க செல்வந்தர் ராஜ் ராஜரட்ணத்தின் வழக்கு நாளை திங்கட்கிழமை நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க பங்குச் சந்தையில் இடம்பெற்ற மிகப்பெரிய உட்சந்தை மோசடி தொடர்பில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பான ஆதாரங்கள் கடந்த ஏழு வாரங்களாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.

இந்த விசாரணைகளின் போது ஏற்றுக்கொள்ள முடியாத போலியான சாட்சிகளை அரசாங்கம் முன் வைத்துள்ளதாக ராஜ் ராஜரட்ணம் சுட்டிக்காட்டினார்.

அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு 25 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20 வருட அனுபவம்

APRIL. 2011 TO SEPT.2011

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011


# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.04 24

★1704 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை தபொஸ்டன் நாளிதழ் வெளியிடப்பட்டது.

★1863 - கலிபோர்னியாவில் கேயிஸ்வில் என்ற இடத்தில் அமெரிக்க பழங்குடிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

★1877 - ஓட்டோமான் பேரரசு மீது ரஷ்யா போரை அறிவித்தது.

★1908 - லூசியானாவில் புயல் காரணமாக 143 பேர் கொல்லப்பட்டனர்.

★1913- வானளாவிக் கோபுரம், வூல்வேர்த் கோபுரம் நியூயோர்க் நகரில் கட்டப்பட்டது.

★1915 - ஆர்மீனிய இனப்படுகொலை கொன்ஸ்டன்டீனபோலில் பல்லாயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர்.

★1955 - இந்தோனேஷியாவின் பாண்டுங் நகரில் ஆசியா மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனநெறி மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★1961- 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வாசா என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.

★1955 - டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.

★1967 - சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமீர் கொமரோவ் அவரது குதிகுடை திறக்க முடியாமல் போனதால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.

★1968- மொரீசியஸ் ஐ.நா.வின் உறுப்பு நாடாகியது.

★1970- முதல் சீனச் செய்மதி டொங் ஃபாங் ஹொங் 1 ஏவப்பட்டது.

★1970- காம்பியா பொதுநலவாய அமைப்பினுள் குடியரசா கியது.

★1981 - முதலாவது ஐ.பி.எம்.தனி மேசைக் கணனி அறிமுகமானது.

★1990- டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் தொலைக்காட்டியை விண்ணுக் குக் கொண்டு சென்றது.

★1993 -இந்தியாவில் பஞ்சாயத்து அரசுத் திட்டம் அமைக்கப்பட் டது.

★1993 - லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.

★2006 - நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம்பெற்ற கலவரங் களை அடுத்து 2002 இல் கலைக்கப்பட்ட நாடாளுமன் றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.

### பிறப்புக்கள்

★1820 - ஜி.யு.போப், தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர் (இ.1908)

★1845 - கார்ல் ஸ்பிட்டெலர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1924)

★1934 - ஜெயகாந்தன், தமிழக எழுத்தாளர்.

★1951 - தம்பிஜயா தேவதாஸ், ஈழத்து எழுத்தாளர்

### இறப்புக்கள்

★1960 - மாக்ஸ் லாவுவே, நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி.1879)

★1964 - ஜெரார்ட் டொமாக், மருத்துவத்துக்கான நோபல் பரிசினை மறுத்த ஜேர்மனியர் (பி.1895)

### சிறப்பு நாள்

★காம்பியா குடியரசு நாள் (1970)



1973 - சச்சின் டெண்டுல்கர், பிறந்த தினம்

# இலங்கை விவகாரம் தொடர்பில் கபட நாடகமாடிய கருணாநிதி பகிரங்க பொதுமன்னிப்பு கோரவேண்டும்

## ஜெயலலிதா ஆவேசம்

(சென்னை)

இலங்கையில் நடந்த இனப்படுகொலையை வேடிக்கை பார்த்ததற்காக கருணாநிதி பொது மன்னிப்புக் கேட்க வேண்டும் என அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த 2008 செப்டெம்பர் முதல் 2009 மே 19ஆம் திகதி வரை வன்னிப்பகுதிக்கு முன்னேறிய இலங்கை இராணுவம் மிகப் பெரிய அளவில் குண்டுமழை பொழிந்து அப்பாவித் தமிழர்கள் இறப்பதற்குக் காரணமாக இருந்தது. 3 இலட்சத்து 30 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் குண்டு மழை பொழிவிலிருந்து தப்பிக்க முடியாத அளவிற்கு மிகக் குறுகிய பகுதிக்குள் சிக்கிக் கொண்டனர். இந்தக் கொடுஞ்செயலுக்கு காரணமான இலங்கை ஜனாதிபதி சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்தி போர்க்குற்றத்திற்காக விசாரிக்கப்பட வேண்டுமென சர்வதேச அளவில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இந்திய அரசோ, தமிழக அரசோ இதுகுறித்து எதிர்ப்பையோ, வருத்தத்தையோ கூடத் தெரிவிக்கவில்லை.

மாறாக 2009 ஒக்டோபரில் கனிமொழி உள்ளிட்ட தி.மு.க.-காங்கிரஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் குழு இலங்கைக்குச் சென்றது. இலங்கையில் எல்லாமே நன்றாக உள்ளதென்றும் அங்குள்ள தமிழர்கள் குறைபட்டுக் கொள்ளும் அளவிற்கு புகார்கள் ஒன்றுமில்லை எனவும் இக்குழு தெரிவித்தது.

என்னதான் இவர்கள் இலங்கை அரசுக்கு நற்சான்றிதழ் கொடுத்தாலும் இலங்கை நிலைவரத்தைக் கண்டறிய ஐ.நா. சபையின் பொதுச் செயலர் பான் கீ மூன் அனுப்பிய குழுவின் அறிக்கையில், இலங்கையில் இனப்படுகொலைகள் நடந்துள்ளன என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கைப் போரை முடிவுக்குக் கொண்டுவர 2009 ஏப்ரல் 27ஆம் திகதி கருணாநிதி 3 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்தது கபடநாடகம் என்பது தெளிவாகிறது. மேலும் தமிழினப் பாதுகாவலர் என தனக்குத்தானே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் கருணாநிதியின் வேடமும் கலைக்கப்பட்டு உள்ளது.

எனவே, தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு ஆதரவாகவும் உடந்தையாகவும் தட்டிக் கேட்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டும் இருந்த கருணாநிதி, தங்களிடம் பகிரங்கமாக பொதுமன்னிப்புக் கோர வேண்டுமென தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)



# நான் உண்ணாவிரதம் இருந்ததை கபடநாடகமென விமர்சிப்பதா?

## ஜெயலலிதாவுக்கு கருணாநிதி கண்டனம்



(சென்னை)

இலங்கையில் போர் நடந்தபோது நான் உண்ணாவிரதம் இருந்ததை கபட நாடகம் என்றும் தமிழக எம்.பி.க்கள் அங்கு சென்று வந்ததையும் ஜெயலலிதா தேவையில்லாமல் குறைகூறியுள்ளார் என முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது கேள்வி - பதில் அறிக்கையில்,

**கேள்வி: இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடந்த போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் குறித்து விசாரிக்க இந்தோனேசிய அரசின் முன்னாள் தலைமை சட்டத்தரணி தலைமையில் விசாரணை கமிஷனை ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் அமைத்தார். அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் எல்லாம் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது குறித்து கருத்து என்ன?**

பதில்: கடந்த ஒன்பது மாதங்களாக நடந்த விசாரணை அறிக்கை இன்னும் அதிகார பூர்வமாக வெளியிடப்படவில்லை. இருந்த போதும் அதில் முக்கிய பகுதிகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அந்த அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என பலரும் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக அறிக்கைவிட்டுள்ள ஜெயலலிதா வழக்கம்போல், தேவையில்லாமல், போர் நடந்தபோது, நான் உண்ணாவிரதம் இருந்ததை கபட நாடகம் என்றும் தமிழக எம்.பி.க்கள் இலங்கை சென்று வந்ததை குறைகூறியும் ஒரு அநாகரிகமான அவருக்கே உரிய நடையில் தெரிவித்துள்ளார்.

**கேள்வி: நான்கு வெளிநாட்டுக்காரர்கள் சென்னை வந்திருப்பதாகவும் அவர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களில் மாற்றம் செய்யப்போவதாகவும் சுப்பிரமணியசாமி ஒரு தகவலை கூறியிருக்கிறாரே?**

பதில்: இதற்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு தேர்தல் கமிஷனுக்குதான் உள்ளது. இந்த செய்தியில் தவறு இருப்பின் அடிக்கடி இப்படிப் பட்ட தவறான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி பீதியில் ஆழத்தும் நபர்கள் மீது தகுந்த நடவடிக்கையாவது எடுக்க முன் வரவேண்டும்.

**கேள்வி: புட்டபர்த்தி சாய்பாபா உடல் நிலை மேலும் மேலும் மோசமாகி வருவதாக தொடர் ந்து செய்திகள் வருகிறதே?**

பதில்: தமிழகம் மீதும் தமிழர்கள் மீதும் புட்டபர்த்தி சாய்பாபா ஆழ்ந்த அன்பு கொண்டவர். தனிப்பட்ட முறையில் என் மீதும் பாசம் கொண்டவர். அவர் உடல்நிலை குறித்து வந்துள்ள செய்திகளை அன்றாடம் மிகுந்த கவலையோடு படித்து வருகிறேன். சாய்பாபா உடல் நலம் தேறுவதற்கு பிராத்தனை செய்யும் பக்தர்களின் நம்பிக்கை வெற்றி பெற நானும் உளமாற வேண்டுகிறேன். (ஸ்ரீ)

# பாரதச் செய்திகள்

# 2ஜி அலைக்கற்றை வழக்கு தொடர்பிலான 2 ஆவது குற்றப்பத்திரிகை நாளை தாக்கல்

## தி.மு.க.வுக்கு பெரும் சிக்கல்

(புதுடில்லி)

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் சி.பி.ஐ. தனது குற்றப்பத்திரிகையை நாளை சிறப்பு நீதிமன்றில் தாக்கல் செய்கிறது. அதில் 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு பெறுவதற்காக நடந்த பணப்பரிமாற்றங்கள் வெளிச்சத்துக்கு வரும் எனத் தெரிகிறது. இதில் ஏற்கனவே சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தியவர்கள் எல்லாம் இடம்பெறஉள்ளனர். இதனால் தேர்தல் முடிவை எதிர்பார்த்துக்காத்திருக்கும் தி.மு.க.வுக்கு இரண்டாவது குற்றப்பத்திரிகையால் சிக்கல் ஏற்படும் எனத் தெரிகிறது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு மோசடி தொடர்பாக 17 மாதங்களாக நடத்திய விசா[ரணை]க்குப் பின் சி.பி.ஐ தன் முதல் பத்திரி[கை]... 2 ஆம் ... தாக்கல் செய்தது. மொத்தம் 80 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையில்,

முன்னாள் அமைச்சர் ராஜா மீது சதி செய்தது, போலி ஆவணங்கள் தயாரித்தல், மோசடி செய்தல், ஊழலில் ஈடுபட்டது மற்றும் அரசு அலுவலகத்தை தவறாகப் பயன்படுத்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களைச் சேர்ந்த ஐந்து உயர் அதிகாரிகளுக்கு பிணை மறுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சி.பி.ஐ. இரண்டாவது குற்றப் பத்திரிகையை நாளை தாக்கல் செய்யவுள்ளது. இதில் பலரது பெயர்கள் இடம்பெறும் என்பது தான் பரபரப்புக் காரணம். அலைக்கற்றை



ஒதுக்கீடு பெறுவதற்கு யார்யாரெல்லாம் எந்த வகையில் செயற்பட்டனர், யார் யாருக்கு இலஞ்சம் கொடுத்தனர் போன்ற விபரங்களைச் சேகரித்துத் தரப்படும் என்றும் சி.பி.ஐ ஏற்கனவே உறுதியளித்தது.

சினியுக் பிலிம்ஸ், கிரீன் ஹவுஸ் பிறைவேட் லிமிட்டெட், குசேகான் புரூட்ஸ் அண்ட் வெஜிடபிள் பிறைவேட் லிமிட்டெட், கலைஞர் டிவி பிறைவேட் லிமிட்டெட் போன்ற நிறுவனங்களிடம் நடந்த பணப்பரிமாற்றம் குறித்து சி.பி.ஐ பல்வேறு கட்டங்களில் விசாரணை நடத்தி முடித்துள்ளது.

இதுகுறித்த வெளிநாட்டுத் தொடர்பு, பணப்பரிமாற்றமும் ஆய்வு செய்யப்பட்டன. 2ஜி ஒதுக்கீட்டில் ஆதாயம் பெற்ற ஸ்வான் நிறுவனத்தின் அங்கமான சினியுக் நிறுவனத்திற்கும், கலைஞர் டிவிக்கும் இடையே நடந்த 214 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம், குற்றப் பத்திரிகையில் இடம்பெறவுள்ளது. சினியுக் நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்ட தொகை திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டது என்று கலைஞர் டிவி தரப்பில் இருந்து விசாரணையின் போது தெளிவாக தெரிவிக்கப் பட்டு விட்டது. இருப்பினும் இந்தப் பரிமாற்றத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை நடந்த விடயங்களையெல்லாம் தொகுத்து யார், யாரெல்லாம் எப்படி சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது குற்றப்பத்திரிகையில் இடம்பெறும் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக , ஏற்கனவே முதல்வர் கருணாநிதியின் மனைவி தயாளு மற்றும் கனிமொழி எம்.பியிடம் நடத்தப்பட்ட விசாரணை விபரங்களும் குற்றப்பத்திரிகையில் இடம்பெறவுள்ளது என்ற பரபரப்பு எழுந்திருக்கிறது. அதனால் தேர்தல் முடிவை எதிர்பார்த்து காத்திருக்கும் தி.மு.க. வுக்கு இரண்டாவது குற்றப்பத்திரிகை சிக்கலை ஏற்படுத்தும் வகையில் அமையும் என சி.பி. ஐ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

திரை விமர்சனம்

# மாப்பிள்ளை




ரஜினி நடித்து வெற்றி பெற்ற மாப்பிள்ளை படத்தின் மாமியார் மருமகன் மோதல் என்ற கருவை மட்டும் எடுத்துக் கொண்டு, காதல், மோதல், காமெடி, சென்டிமென்ட், அக்ஷன் கலந்து சம்மர் ஸ்பெஷல் விருந்தாக வந்திருக்கும் படம் மாப்பிள்ளை. கும்பகோணம் தாசில்தார் மகன் தனுஷ். வீட்டுக்கு அடங்காமல் ஊர் வம்பை விலைக்கு வாங்கி திரிகிறார். பாதிக்கப்பட்டவர்கள் பஞ்சாயத்தைக் கூட்டுகிறார்கள். பொறுப்பில்லாத மகனால் தந்தைக்கு மாரடைப்பு வருகிறது. இதனால் சென்னையில் உள்ள அக்கா வீட்டுக்கு வருகிறார். சென்னை வந்த பின்னர் நல்லவனாக மாறும் தனுஷ், அந்த ஏரியாவுக்கு முன்மாதிரியாக இருக்கிறார். தனுஷை கோடீஸ்வரி மனீஷா கொய்ராலாவின் மகள் ஹன்சிகா காதலிக்கிறார்.

மகளுக்கு வீட்டோடு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கும் மனீஷா, தனுஷ் அதற்கு சரியானவர் என்று தீர்மானித்து திருமண ஏற்பாடுகளை செய்கிறார். இந்நிலையில் தனுஷ் அடிதடி பார்ட்டி என்ற விபரம் மனீஷாவுக்கு தெரிய வருகிறது. உடனே ஆசிஷ் வித்யார்த்தியின் மகனை ஹன்சிகாவுக்கு கட்டி வைக்க ஏற்பாடு செய்கிறார். மனீஷாவின் சதியை தெரிந்து கொள்ளும் தனுஷ், திடீர் மாப்பிள்ளையை கடத்தி அதே மண்டபத்தில் ஹன்சிகாவை கைப்பிடிக்கிறார். பணத்தால் தனுஷிடம் இருந்து மகனை பிரித்துக் காட்டுவதாக மனீஷாவும் பணத்தை விட அன்பு, பாசம்தான் உயர்ந்தது என்று புரிய வைப்பதாக தனுஷும் சவால் விடுகிறார்கள். சவாலில் ஜெயிப்பது யார்? என்பது மீதிக்கதை.



பக்தி நிறைந்த அப்பாவியாக தனுஷ் அறிமுகம் ஆகும்போதே தியேட்டர் களை கட்டுகிறது. விவேக் தலைமையிலான சோம்பேறிக் கூட்டத்துக்கு அட்வைஸ் பண்ணுவது, வில்லங்கமான ஐடியா கொடுத்து சிக்கலில் மாட்டி விடுவது, வலியவந்து காதலைச் சொல்லும் ஹன்சிகாவிடம் பிகு பண்ணிக் கொள்வது, பின்னர் அவரின் ரேப் மிரட்டலுக்கு பயந்து நடங்குவது என தனுஷ், விவேக்கின் காமெடி கம்பெனியில் சேர்ந்து கலகலக்க வைக்கிறார். அவரது கும்பகோணத்து அடிதடி வாழ்க்கை பக்கா அக்ஷன் பிளாக். அத்தையுடன் ஆடும்மோதல் ஆட்டம், சவால் சடுகுடு. பண பலத்துடன் மனீஷா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மன பலத்தால் தனுஷ் பதிலடி கொடுப்பது என பரபர திரைக்கதையில் படம் ரொக்கெட் வேகத்தில் பறக்கிறது.

காஷ்மீர் அழகி மாதிரி இருக்கிறார்.ஹன்சிகா. வருடம் 160 குஷ்புவை நினைவுபடுத்துகிறார். கொஞ்சம் பேச்சிலிருந்து குத்துப்பாட்டு டான்ஸ் வரை கலக்கி எடுத்து படத்தை கலர் புல்லாக்குகிறார். அடாவடி மாமியாராக மனீஷா கொய்ராலா ஆச்சரியப்படுத்துகிறார். அவன் யாருன்னு காட்டிட்டான் . இனி நான் யாருன்னு காட்டுறேன் என லேடி பிரகாஷ்ராஜாகிறார். விவேக் அடிக்கும் லூட்டிகளும் வாங்கும் அடிகளும் பரபர காமெடி. இரண்டாம் பாதியில் என்ட்ரியாகும் போலி ஜோதிடர் மனோபாலா வரும் காட்சிகள் சம்மர் காமெடி ஸ்பெஷல். மணிசர்மாவின் இசையில் பாடல்கள் ஆட்டம் போட வைக்கிறது. ஒ ளிப்பதிவாளர் சதீஸ்குமார், சபாஷ்குமார், ரசிகர்களின் ப்ல்ஸ் அறிந்து பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய ஹொலிடே ட்ரீட்டாக மாப்பிள்ளையை கொடுத்திருக்கிறார் இயக்குநர் சுராஜ்.



## வில்லனாக மாறினார் எம்.எஸ்.பாஸ்கர்

இதுவரை காமெடி மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து வந்த எம்.எஸ்.பாஸ்கர் இப்போது முதன்முறையாக புலிவேஷம் எனும் படத்தின் மூலம் வில்லனாக அவதரிக்க இருக்கிறார்.

டப்பிங் ஆர்டிஸ்டாக தனது சினிமா பயணத்தை தொடங்கிய எம்.எஸ்.பாஸ்கர் இப்போது தமிழில் முன்னணி காமெடி நடிகராக வலம் வந்து கொண்டு இருக்கிறார். சின்னத்திரை, வெள்ளித்திரை என இரண்டிலும் அசத்தி வரும் எம்.எஸ்.பாஸ்கர் புதிதாக வில்லனாகவும் மாறியிருக்கிறார். இயக்குநர் பி.வாசு இயக்கத்தில் உருவாகி வரும் புலிவேஷம் படத்தில் எம்.எஸ். பாஸ்கர் வில்லனாக நடிக்கிறார்.

இதுகுறித்து அவர்கூறியதாவது, நான் காமெடியனாகவே நடிக்க விரும்புகிறேன். ஆனால் இந்தப்படத்தில் இயக்குநர் வாசு சேர் என்னை வில்லனாக நடிக்கும்படி கேட்டபோது, அதை என்னால் மறுக்க முடியவில்லை. உடன் நடிக்க ஒப்புக்கொண்டேன். வில்லனாக நடிப்பது இதுவே முதல்முறை என்று கூறினார்.

சினிமாவில் கமரா முன் தோன்றுவதற்கு முன்னர் டப்பிங் ஆர்டிஸ்டாக கிட்டத்தட்ட 1000 படங்களுக்கு பேசியிருக்கிறார் எம்.எஸ்.பாஸ்கர். தற்போது விக்ரமுடன் தெய்வத்திருமகன் படத்தில் நடித்துள்ளார். விரைவில் இப்படம் திரைக்கு வர இருக்கிறது. அதனைத் தொடர்ந்து விஜய்யுடன் வேலாயுதம், எத்தன், சிவ பூஜையில் கரடி போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

## சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்க போட்டி நடத்தும் நாயகிகள்!



ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில் கே.வி.ஆனந்த் இயக் கத்தில் அடுத்து சூர்யா நடிக்கும் படம் மாற்றான். படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்க பெரும் போட்டியே நடக்கிறதாம் இளம் நாயகிகளுக்குள்.சூர்யாவுக்கு ஜோடியாக முதலில் பேசப்பட்டவர் மேக்னா ராஜ். ஆனால் ஹீரோயின் பார்வை அவர் மீது படவில்லை யாம். அதனால் தப்ஸி, சமந்தா மற்றும் காஜல் அகர்வாலின் புகைப்படங்களைக் காட்டினார்களாம்.



இதுமட்டும் இல்லாமல் தீபிகா படுகோனை சூர்யாவுக்கு ஜோடி யாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் நான் சுப்பர் ஸ்டாரின் ஜோடி இப்போ.சம்பளம் 6 கோடி என தீபிகா படு கோன் கைகளை விரிக்க தலைதெறிக்க ஓடி வந்திருக்கிறார்கள் படக்குழுவினர். இப்போது காஜல் அகர்வால், தப்ஸியிடம் பேச்சுவார்த் தை நடத்தி வருவ தாக தகவல்கள் தெரி விக்கின்றன.





## 'எங்கேயும் காதல்' ஜெயம்ரவி-ஹன்சிகா



## வடிவேலு ஒரு சாக்கடை! இயக்குநர் அமீர் கடும் தாக்கு!!

தேர்தல் பிரசாரத்தில் விஜயகாந்த் பற்றிப் பேசிய நடிகர் வடிவேலு ஒரு சாக்கடை என்று இயக்குநர் அமீர் கூறியுள்ளார். வடிவேலு பிரசாரம் குறித்தும் விஜயகாந்த் குறித்த அவரது விளாசல் பற்றியும் இயக்குநர் அமீர் அளித்துள்ள பேட்டியில், சாமி ஊர்வலத்துக்கும் கூட்டம் வரும்.சாவு வீட்டுக்கும் கூட்டம் வரும். வேடிக்கை பார்ப்பது தமிழ் மக்களோட தவிர்க்க முடியாத கலாசாரம். யாரையும் திட்டிப் பேசினா நான்கு பேர் கேட்கத்தானே செய்வாங்க. அந்த மாதிரி தான் வடிவேலுக்கும் சிங்கமுத்துக்கும் செந்திலுக்கும் கூட்டம் வந்தது என்று கூறியுள்ளார்.

விஜயகாந்த்துக்கு கப்டன் என்கிற பட்டம் ஏன் என்று கேட்கிற வடிவேலுக்கு வைகைப் புயல் என்கிற பட்டம் மட்டும் பொருத்தமா? இந்தப் புயல் எந்த மரத்தை பேத்துச்சு. எந்த வீட்டை இடிச்சுச்சு? வட்ட செயலாளர் தொடங்கி ரவுடிங்க வரைக்கும் அத்தனை பேருக்கும் பட்டம் கொடுத்தே இந்த ஊரு பழகிடுச்சு. விஜயகாந்தைப் பற்றி இவ்வளவு பேசுற வடிவேலு அந்த அம்மையார் விடயத்தில் மட்டும் ஏன் அடக்கி வாசிக்க ணும். ஆட்சி மாறினால் அதோகதி ஆகி டும்கிற பயம்தானே? எப்போதுமே அம் மையார் என்றுதான் அழைப்பேன் என 87 வயதி லும் நாகரிகத்தோடு பேசுகிறார் முதல்வர் கலை ஞர்.அந்த அசாத்திய நாகரிகத்துக்குப் பக்கத்தில் ஒரு சாக்கடையோட சப்போட் எதுக்கு? என்றும் கூறியிருக்கிறார் இயக்குநர் அமீர்.



# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி ஏமாற்றிய நபர் கைது

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப்பெற்றுத்தருவதாக கூறி இளைஞர்களை மலேசியாவுக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களை அநாதரவாக விட்டு வந்துள்ள நபர் ஒருவரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப்பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சிலாபம் பங்கதெனிய வீரக்குமநிதழுவ எனும் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தனது வீட்டில் இருந்த சமயம் கடந்த 21 ஆம் திகதி பகல் விசாரணைப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரினால் நடத்திச் செல்லப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் போலியான ஒன்று என்பதையும் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர் மலேசியாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாக கூறி சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களிடம் பணம் பெற்றுள்ளார்.

ஒவ்வொருவரிடமும் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் முதல் மூன்றரை இலட்சம் வரையில் பணம் பெற்றுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது .

அத்துடன் இரண்டு வருடங்கள் மலேசியாவில் தங்கியிருக்க விசாவுடன் மாதம் அறுபதாயிரம் சம்பளம் மற்றும் உணவு, தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும் என இச்சந்தேக நபர் இளைஞர்களிடம் தெரிவித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் தொழிற்சங்கத்தினருக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் நடைபெறவிருந்த இரண்டாவது பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தை இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவிருந்த போதும் அத் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மே மாதம் முதல் வாரத்தில் இரு தரப்பினருக்கும் வசதியான ஒரு தினத்தில் இப்பேச்சுவார்த்தையை நடத்த முடிபு செய்யப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-2)

Hatton National Bank
Two Decades of Microfinance in Sri Lanka

## அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.01.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 30.04.2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா. 500) செலுத்தி

**அல்லது**

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன்தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி-3053)

ஹற்றன் நஷனல் வங்கி

HNB

# வடமாகாணத்திற்கு 500 உழவு இயந்திரங்கள் கையளிப்பு

## இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவிப்பு

வடமாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 600 மில்லியன் ரூபா பெறுமதியான 500 உழவு இயந்திரங்களை வட மாகாணத்தின் பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு இணைப்பு கருவிகளுடன் 500 உழவு இயந்திரங்கள் வடமாகாணத்திலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டதென்பதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ததாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 52 உழவு இயந்திரங்கள் கடந்த நவம்பர் முதலாம் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா உத்தியோக பூர்வமாக கையளித்தார்.

இதேவேளை குறித்த டிரக்டரர்கள் வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந் தவர்களுக்கு வழங்கப்படர்மல் வேறு தரப் பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் தகவலின் படி வட மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்திய உழவு இயந்திரங்களின் விபரம் வருமாறு,

யாழ்ப்பாணம்-109 , முல்லைத்தீவு- 112, கிளிநொச்சி-110, மன்னார்-100, வவுனியா-69.

(ஸ்ரீ-2)

# ஐ.நா.செயலாளர் நாயகம் ரஷ்யாவுக்கு விஜயம்

இலங்கை தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கையின் எதிர்ப்பை பாராது வெளியிடுவதாக தமது பேச்சாளர் மூலம் அறிவித்திருந்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ரஷ்யாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தமது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் ஒரு கட்டமாக மொஸ்கோ நகருக்கு சென்ற அவர் ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவையும் சந்தித்துள்ளார்.

தமது பொறுப்புக்களை செயற்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் பதவியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆதரவு வழங்குமாறு ரஷ்யாவிடம் . அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளரின் பதவிக்காலம் நிறைவடையும் தறுவாயில் உள்ள நிலையில் அவருக்கு மீண்டும் இரண்டாம் தவணை பதவியில் நியமனம் பெறுவதற்கு ரஷ்யாவின் ஆதரவு அத்தியாவசியமாகின்றது.

பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா பான் கீ மூனின் இரண்டாம் தவணை பதவி நியமனத்தை வீட்டோ அதிகாரத்திற்கு உட்படுத்த முடியும் என்பதே இதற்கு காரணமாகும்.

அதேவேளை இலங்கை மீதான ஐ.நா.நிபுணர் குழு வெளியிடவுள்ள அறிக்கைக்கு ரஷ்யா இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

Enlighten Your Career

முதன் முதலாக யாழ்மண்ணில்
சர்வதேச பல்கலைக்கழகங்களினூடான
பொறியியல்மானி, விஞ்ஞானமானிக்கற்கைநெறிகள்

BEng. From Unversity of Wolverhampton UK
BSc. International Transportation Management and Logistics
From Dalian Maritime University (DMU)

Call Now : 011 4 486 486 / 0214 925 925

CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS
KKS Road, Maruthanarmadam, Jaffna.

ADinnovations

மனதில் இறைவன் உறைகிறான்; அவன் தான் மனச்சான்று.

~மினாண்டர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அன்பார்ந்த முஸ்லிம் மக்களே! அல்லாவின் பெயரால் கேட்கின்றோம்!

அன்பார்ந்த முஸ்லிம் மக்களே! இந்த நாட்டில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், அவலங்களின் யாவற்றினதும் நடுநிலையான சாட்சியங்கள் நீங்களே! உங்களைத் தவிர, தமிழ் மக்களுக்கு வேறு எந்த சாட்சியங்களும் கிடையா.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நீங்களும் சிறுபான்மை இனம் என்ற வகுதிக்குள் அடக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்நாட்டின் பெரும்பான்மை ஆட்சியின் பேரினவாத அடக்குமுறைக்கு நீங்களும் ஆளாகிய நிகழ்வுகள் உங்கள் மொழியில் வரலாற்று ஏடுகளாகும்.

இந்நிலையில் இலங்கையில் சகல மக்களும், சகல இனங்களும், சகல மதங்களும் சம உரிமை பெறவேண்டுமென்ற கொள்கையில் மாற்றுக்கருத்தைக் கொண்டிருக்க மாட்டீர்கள் என்பது எம் அசையாத நம்பிக்கை.

அந்த நம்பிக்கையோடுதான் உங்களிடம் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

முஸ்லிம் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகள், அமைப்புகள், நிறுவனங்கள், ஆளுந்தரப்புடனோ அல்லது எதிர்க்கட்சியிலோ அங்கம் பெறவும் ஆதரிக்கவும் முடியும். அது உங்களின் சுதந்திரமும் இராஜதந்திரமுமாகும்.

எனவே, அது விடயத்தில் நாம் கருத்துக் கூற முன்வரவில்லை. ஆனால், இலங்கை தமிழர் தொடர்பில் – வன்னியில் நடந்த மிகப்பெரும் கொடூர யுத்தத்தில் – தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துயரத்தை, பேரிழப்பை, உயிரழிவை நீங்கள் நிராகரித்துவிட மாட்டீர்கள் என்பது தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

வன்னி யுத்தம் மிக உச்ச கட்டத்தில் இருந்த போது அதில் அப்பாவித் தமிழ் மக்கள் கொலையுண்டு போன நிகழ்வுகள் என்றுமே நியாயப்படுத்த முடியாதவை.

அதை நியாயப்படுத்த முடியுமென்று யாரேனும் கூறுவார்களாயின் உங்கள் மார்க்கத்தின் மொழிநடையில் "அவர்கள் இறைவனுக்கு அநீதி இழைப்பவர்களாவர்". எனவேதான் தமிழ் மக்கள் அனுபவித்த வேதனையில் இழப்புகளில் முஸ்லிம் மக்கள் – அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகள் பொறுப்பற்ற முறையில் கருத்துகளை – கண்டனங்களை – கையொப்பங்களைக் கொடுத்துவிடக் கூடாது. இதனையே அப்பாவித் தமிழ் மக்கள் உங்களிடம் வேண்டி நிற்கின்றனர்.

அன்பார்ந்த முஸ்லிம் மக்களே! இது உங்களின் மனச்சாட்சி பேசுகின்ற நேரம். உங்கள் மனச்சாட்சியின் பேச்சு என்றோ ஒருநாள் வரலாற்றுப் பதிவாகும். அந்த பதிவு முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்படவில்லை. அவர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் நீதியைக் கடைப்பிடித்தனர் என்பதாக இருக்கட்டும். அல்லாவின் பெயரால் உங்களிடம் கேட்கின்றோம்.

# விடுவிக்கப்படும் போராளிகளுக்கு அரசாங்கத்தினால் வேலைவாய்ப்பு

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தெரிவிப்பு

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு அரசால் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்து தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 483 போராளிகள் வவுனியா கலாசார மண்டபத்தில் வைத்து நேற்று அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் வவுனியாவிலுள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் திருமணமாகி இரு குழந்தைகளுக்கு மேலுள்ள 483 போராளிகள் குடும்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சந்திரசிறி கஜதீர, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள ரெபியா நிறுவனத்தின் ஊடாக வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆயிரம் விடுவிக்கப்பட்ட போராளிகளுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலான சுய தொழில் கடன் திட்டம் அடுத்த மாத நடுப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவின் அறிக்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு தடையாக அமைந்துவிடும். மனித உரிமை மீறல்கள் குறித்து வீணாகக் கதைப்பவர்களுக்கு இங்கு நடைபெறும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் நல்லதொரு எடுத்துக்காட்டு என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திஸநாயக்க, வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.சார்ள்ஸ், வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கமதே பெரேரா, புனர்வாழ்வு ஆணையாளர் சுதந்த ரணசிங்க மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-5)

# மருத்துவமனைமீது செல் தாக்குதல் இராணுவ அதிகாரி உறுதிப்படுத்தினர்

## அல்ஜசீராவில் அம்பலம்

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு செல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை இராணுவ அதிகாரியொருவர் ஏற்றுக் கொள்ளும் ஒளிக்காட்சிகளை அல்ஜசீரா வெளியிட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த ஐ.நா.நிபுணர்குழுவினர் மருத்துவமனைகள் மீது இராணுவத்தினர் எறிகணை வீச்சுகளை மேற்கொண்டிருந்ததாக குற்றம் சாட்டியிருந்தனர்.

ஆயினும் பாதுகாப்பு தரப்பு அதனை வன்மையாக மறுத்திருந்ததுடன் அவ்வாறு எந்தவொரு மருத்துவமனை மீதும் செல் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என்று பதில் அறிக்கை விட்டிருந்தது. பல ஊடகங்களின் நேர்காணல்களின்போது பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அதனை வலியுறுத்தியிருந்தார்.

ஆயினும் புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் சேதங்களைப் பார்வையிடும் அல்ஜசீரா ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் இராணுவ அதிகாரியொருவர் அந்த சேதங்கள் செல் தாக்குதலின் காரணமாக நிகழ்ந்திருப்பதை ஏற்றுக்கொள்கிறார்.

அத்துடன் இறந்த பெண் போராளிகளின் சடலங்களை இராணுவத்தினர் சப்பாத்துக்காலால் உதைக்கும் காட்சிகளும் இந்த ஒளிப்பதிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரஸ்தாப ஒளிநாடாக்கள் இலங்கையில் செயற்பட்ட பெண் ஊடகவியலாளர் ஒருவரால் முன்னரே அல்ஜசீராவுக்கு வழங்கப்பட்டவையாகும். அவர் தற்போது நாட்டை விட்டு வெளியேறி மேற்கு நாடொன்றில் தஞ்சமடைந்துள்ளார் என அறிய முடிகின்றது.

அத்துடன் சிவில் இலக்குகள் மீது விமானப் படையினர் குண்டு வீசியதை ஒளிப்பதிவு செய்துள்ள விமான ஒளிப்பதிவுக் காட்சிகளும் அல்ஜசீரா ஒளிநாடாவில் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் பல பொதுமக்களும் இதில் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். (எ-1)

## இடமாற்றம் நிறுத்தம்

### பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்று ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

2011இல் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பாக உடனடித் தீர்மானங்கள் மேற்கொள்ள இருப்பதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் இன்று 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வடக்கு மாகாணத் திணைக்களத்தின் முன் (மருதனார்மடம்) ஒன்றுகூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ஐ.நாவுக்கு பதிலளிக்கும் குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை

## நல்லிணக்க ஆணைக்குழு கைவிரிப்பு

(கொழும்பு)

நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதிலளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் நியமிக்கும் எந்தவொரு குழுவிலும் அங்கம் வகிக்கப் போவதில்லை என உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய ஏழு உறுப்பினர்களுமே இம்முடிபை எடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் குரல் தரவல்ல அதிகாரி கூறியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு சுதந்திரமாகச் செயற்படுவதாகவும் அதன் நோக்கமும் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவுக்குப் பதிலளிக்கவுள்ள குழுவின் நோக்கமும் வேறுபட்டது என உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பதிலளிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் வெளிவிவகார செயலாளர் மூவரை உள்ளடக்கிய குழுவில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் எம்.ஜி.பாலிக்கார இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கம்பன் விழா-2011 இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று ஞாயிற்றுக்கிழமை வரை காலை, மாலை என இரு அமர்வுகளாக கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

தொடக்கவுரையை அலி அக்பர் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் ''துறந்தார் பெருமை துணைக் கூறின்...'' என்ற தலைப்பில் சிந்தனை அரங்கை பேராசிரியர் சோ. சத்தியசீலன் நிகழ்த்துவார்.

மாலைநேர அமர்வு 5.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர் சி.தில்லைநாதன், தொடக்கவுரையை பேராசிரியர் சி. பத்மநாதன் ஆகியோர் ஆற்றுவார்கள்.

நிறைவுரையை ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி கோவில் அறங்காவலர் செல்வி மாலா சபாரத்தினம் நிகழ்த்தவுள்ளார்

அத்துடன் ''தேசத் துரோகக் குற்றச்சாட்டு'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# புட்டபர்த்தியில் இருந்து ஒரு ரிப்போர்ட்
# கல்ப விருட்சத்தில் கண்ணீர் கோரிக்கை!



சாய்பாபாவுக்கு உடல் நலக் குறைவு! என்ற செய்தி பரவ உலகெங்கும் உள்ள அவரது கோடிக் கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கி தீவிரமாகப் பிரார்த்திக்கின்றனர். சாய்பாபாவின் உடல்நிலை குறித்து நிம்மதி அளிக்கும் வகையிலும் பதற்றம் உண்டாக்கும் விதத்திலும் மாறி மாறி வரும் மருத்துவக் குறிப்புகள் அந்த பக்தர்களை ஆழ்ந்த கவலைக்கு ஆளாக்கியிருக்கிறது. ஆந்திரா மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் இருக்கும் புட்டபர்த்திக்கும் அதனைச் சுற்றியுள்ள 50இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் மருத்துவம், கல்வி, போக்குவரத்து, குடி நீர் போன்ற அத்தனை அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து இருக்கிறார் சாய் பாபா. அந்த மக்களை பொறுத்துவரை சாய்... பாபா கடவுள்!

கடந்த மார்ச் 28 ஆம் திகதி சாய் பாபாவின் உடல் நிலை மோசமானது. உடனே புட்ட பர்த்தியில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டார். அன்று முதல் சாய்பாபாவுக்கு சிறுநீரகக் கோளாறு, மஞ்சள்காமாலை, பேஸ் மேக்கரில் கோளாறு என தினம் தினம் புதுப்புது வதந்திகள் பக்தர்களை அச்சுறுத்தும் வண்ணம் வந்தபடியே இருக்கின்றன. சாய்பாபா இருக்கிறாரா இல்லையா? எனக் கேள்வி கேட்டு பக்தர்கள் சிலர் ஆந்திரா உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போடும் அளவுக்கு அவருடைய உடல்நிலை குறித்த தகவல் உறுதிப் படுத்தப்படாமலே நாட்கள் நகர்கின்றன. சாய்பாபாவை காண்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த அருளினியன் மகாலிங்கம் என்ற இளைஞனுடன் பேசினோம்.

பாபா நலம் பெற்று எழுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அவருக்காக தீவிர பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. சாய் பாபா இங்குள்ள கல்ப விருட்சத்துக்கு (கற்பக மரம்) சிலநேரங்களில் பக்தர்களை அழைத்துச் செல்வார். அந்த பக்தர்களுக்கு என்ன வேண்டும் என்று விளையாட்டாக கேட்டபடியே அதிலிருந்து அவற்றை வரவழைத்துத் தருவார். இப்போது என்னைப்போன்று பக்தர்கள் எல்லாம் விரும்பிக் கேட்பது பாபாவின் நலனை மட்டுமே. அதனையே கோரிக்கையாக்கி சீட்டுக்களாக அந்த கல்ப விருட்சத்தில் கட்டியிருக்கிறோம். சிகிச்சையில் இருக்கும் பாபாவின் சமீபத்ய புகைப்படத்தை பிரசாந்தி நிலைய நிர்வாகிகள் வெளியிட்டால் தேவையில்லாமல் அவரைப் பற்றி எழும் வதந்திகளும் பதற்றங்களும் அடங்கும் என்பது எங்களின் வேண்டுகோள்.

சாய்பாபாவே ஒருமுறை "நான் 96 வயதில் தான் இந்த அவதாரத்தை முடித்துக் கொள்வேன்" என சொல்லி இருக்கிறார். அவருக்கு இப்போது 86 வயது தான். அவர் இன்னும் பல ஆண்டுகள் நலமாக வாழ்ந்து எங்களைக் காப்பாற்றுவார். அதன் பின்னர் பிரேமசாயி என்ற அடுத்த அவதாரமாக மறுபடி தோன்றி எங்களைத் தொடர்ந்து வழிநடத்துவார்... என்கிறார் மிகுந்த நம்பிக்கையோடு.

பிரசாந்தி நிலையத்திற்கு நெருக்கமான சிலரிடம் நாம் பேசினோம்.

"சாய்பாபாவை கார்ட்டியாலஜி உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த மிகச் சிறந்த மருத்துவர்களும் அமெரிக்காவில் இருந்தபடியே 25 டாக்டர்கள் அடங்கிய ஸ்பெசல் டீமுன் கான்ஃபெறன்சிங் முறையில் அவரைக் கண்காணித்து வருகிறது. சாய்பாபா ட்ரஸ்ட்ரை சேர்ந்த கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆச்சிரமங்கள் உள்ளிட்ட அனைத்துச் சொத்துக்களையும் அரசுடைமையாக்க ஆந்திரா அரசு நினைப்பதாக வரும் செய்திகள் பாபாவின் பக்தர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. அப்படி ஆந்திரா அரசின் கட்டுப்பாட்டுக்குபோனால் பாபா இத்தனை ஆண்டுகளாக செய்து வந்த அத்தனை சேவைகளுமே வீண்தான் என்று ஆகிவிடும். அதன் பின்னர் அதில் ஊழலும் அரசியலும் தலை எடுத்து புனிதத் தன்மைக்கே பங்கம் வந்து விடும். சாதி. மதம், நாடு என்று எந்த வித்தியாசங்களும் பாராமல் சிகிச்சை அழித்துவரும் சுப்பர் ஸ்பெஷாலிற்றி மருத்துவ மனையில் இல்லாத பிரிவுகளே கிடையாது- பில் போடும் பிரிவை தவிர அந்த அளவுக்கு சேவையை இலவசமாக்கியிருக்கிறார் பாபா. ஒருவேளை இதில் எல்லாம் அரசு தலையிட ஆரம்பித்தால் உண்டியல் என்பதையே பாத்திராத பிரசாந்தி நிலையத்தில் மூலைக்கு உண்டியல் வைக்கவும் ஆரம்பித்துவிடுவார்கள். அரசியல் வாதிகள். இது எதுவும் நடப்பதற்கு நாங்கள் விடமாட்டோம் என்றார் உறுதியோடு.

நல்லதே நடக்கக்காத்திருப்போம்.

புட்டபத்தியிலிருந்து
இரா.வினோத்

# அகதி அந்தஸ்து கோரும் 81 பேர் கொக்கோஸ் தீவில் தஞ்சம்

(கொழும்பு)

அகதி அந்தஸ்து கோரும் 81 பேரைக் கொண்ட படகொன்று கொக்கோஸ் தீவை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடைப்பட்ட வழிப் பிரதேசத்தில் அமைந்துள்ள கொக்கோஸ் தீவிற்கு இவர்கள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படகு செலுத்துநர்கள் உட்பட குறித்த 81 பேரைக்கொண்ட குழுவில் அதிகமானவர்கள் இலங்கையர்களும் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவர்கள் மேலதிக விசாரணைகளின் பொருட்டு கிறிஸ்மஸ் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத முறையில் அகதி அந்தஸ்து கோரும் நோக்கில் வருபவர்களை பரிமாற்றும் இடமாக கருதப்படும் கொக்கோஸ் தீவில் 600க்கும் அதிகமான அகதிகள் தங்கியுள்ளனர்.

கொக்கோஸ் நிர்வாகிகளுக்கு சட்டவிரோத குடியேறிகளின் பிரச்சினை பெரும் இடையூறுகளை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3)

# சம்பளக் கொடுப்பனவு கிடைக்காததால் சவுதியில் இலங்கையர்கள் சிரமம்

(கொழும்பு)

தமக்கான சம்பளத்தொகை உரியவாறு கிடைக்காத காரணத்தினால் சவுதிஅரேபியாவின் தமாவில் பணியாற்றும் 15 இலங்கையர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சவூதி அரேபியாவில் உள்ள கட்டட நிர்மானம் நிறுவனம் ஒன்றில் சாரதியாக தாங்கள் சேவையாற்றுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக கடந்த வருடம் தொழில் வாய்ப்புக்காக தாங்கள் சவூதி அரேபியா சென்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

தமது சம்பளப்பிரச்சினையை குறித்து அந்த நாட்டிற்கான இலங்கைக் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது சவூதி அரேபியாவில் இது போன்ற சம்பவங்கள் அதிகளவில் பதிவாவதாக தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இலங்கையர்கள் எதிர்நோக்கியுள்ள இந்த பிரச்சினை தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார் . (ஸ்ரீ-2)

# பொலிஸ் விசேட அதிரடிப்படை உயரதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவி வைச் சேர்ந்த உயரதிகாரிகள் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அத்தியட்சகர், துணை பொலிஸ் அத்தியட்சகர், விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி உள்ளிட்ட உயரதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் உத்தரவிற்கு அமைய உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்புரைக்கமைய பாதாள உல கக் கோஷ்டியினரை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை விசேட அதிரடிப்படையினர் ஆரம்பித்திருந்தனர்.

விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகளினால் சில முக்கிய பாதாள உலகக்கோஷ்டி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டதுடன் சிலர் நாட்டை விட்டுத்தப்பிச் சென்றனர்.

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு எதிரான நடவடிக்கைளை அதிகரிக்கும் நோக்கில் விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 17.04.1944 இறப்பு 25.03.2011

அமரர் தம்பன் குமாரவேலு



நாட்கள் முப்பத்தொன்று ஆனாலும்
ஆறுமோ அப்பா எம் துயரம்!
நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும்
உங்கள் நினைவு!


இன்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்-ஜீவன்

உடுவில் மேற்கு, சுன்னாகம்.

(4676)

# டில்லியில் ரன் மழை— சேவாக் அணிக்கு வெற்றி



(டில்லி)

சேவாக்-வோர்னர் ஜோடியின் அதிரடி ஆட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் டில்லியில் நேற்று நடைபெற்ற 26ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி வோர்னர்-சேவாக் ஜோடி அதிரடி ஆட்டத்தில் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளையிழந்து 231 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் டேவிட் வோர்னர் 48 பந்துகளில் (7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 77 ஓட்டங்களையும் வீரேந்திர சேவாக் 35 பந்துகளில் (8 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 77 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் ஆட்டமிழக்காமல் 15 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 28 ஓட்டங்களையும் நாமன் ஓஜா ஆட்டமிழக்காமல் 8 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவீன்குமார், நாயர், சாவ்லா, டேவிட் ஹசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 231 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை விரட்டிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிக்கு ஷோன் மார்ஷ் அதிரடியாக ஆடிப் போராடினார்.

எனினும் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளையிழந்து 202 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.


இதன்மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஷோன் மார்ஷ் 46 பந்துகளில் (9 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 95 ஓட்டங்களையும் அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 33 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 42 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் அஜித் அகாகர் 2 விக்கெட்டுகளையும் மோர்னி மோர்கல், இர்பான் பதான், ஆரூன், ஹோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் டில்லி டேர் டேவில்ஸ் அணியின் டேவிட் வோர்னர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் 2ஆவது வெற்றியைப் பெற்று 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.



## இன்றைய ஆட்டங்கள்

டெக்கான் சார்ஜர்ஸ் Vs மும்பை இந்தியன்ஸ் (ஹைதராபாத்- பி.ப. 4)

ராஜஸ்தான் ரோயல்ஸ் Vs கொச்சி தஸ்கேர்ஸ் (ஜெய்ப்பூர்-இரவு 8)

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.469 |
| கொல்கத்தா | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +0.393 |
| கொச்சி | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | +0.096 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.095 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | -0.391 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | -0.898 |
| புனே வாரியர்ஸ் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | +0.667 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | +0.073 |
| சென்னை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.157 |
| டில்லி | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.231 |

# சாய் பாபாவுக்காக சச்சின் பிரார்த்தனை

## பிறந்த தினக் கொண்டாட்டங்கள் இரத்து



ஸ்ரீ சத்யசாய் பாபா விரைவில் குணமடைய வேண்டுமென தான் பிரார்த்திப்பதாக இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இதற்காக இன்று நடைபெறவிருந்த தனது பிறந்த தினக் கொண்டாட்டங்களையும் அவர் இரத்துச் செய்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவரான டெண்டுல்கர் இன்று நடைபெறவுள்ள டெக்கான் சார்ஜஸ் அணியுடனான போட்டியில் பங்கு பற்றுவதும் சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சச்சின் டெண்டுல்கருக்கு இன்று 38ஆவது பிறந்த தினமாகும். எனினும் 86 வயதான சத்யசாய் பாபா புட்டபர்த்தி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதால் தனது பிறந்த தினக் கொண்டாட்டங்களை இரத்துச் செய்துள்ளதாக டெண்டுல்கர் நேற்று அறிவித்துள்ளார்.

ஸ்ரீ சத்யசாய் பாபா விரைவில் குணமடைய வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன். இப்பிரார்த்தனையில் என்னுடன் இணைந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றேன் என டுவிட்டர் இணையத்தளத்தில் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிக்காக மும்பை இந்தியன்ஸ் அணியினர் நேற்று ஹைதராபாத் நகருக்குச் சென்றனர். ஆனால், டெண்டுல்கர் அவர்களுடன் செல்லவில்லை. அவர் சாய் பாபாவைத் தரிசிப்பதற்காக இன்று புட்டபர்த்திக்குச் செல்லக்கூடும். சில வேளை தாமதமாக அவர் ஹைதராபாத்திற்கு வரக்கூடும் எனவும் கருதப்படுகிறது.

சத்யசாய் பாபாவின் தீவிர பக்தரான சச்சின் டெண்டுல்கர் ஏற்கனவே பல தடவைகள் புட்டபர்த்திக்குச் சென்று சத்யசாய் பாபாவிடம் ஆசி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துளித்துளியாய்...

### ஐ.பி.எல்லுக்கு 2ஆவது இடம்

உலகிலேயே அதிக இரசிகர்கள் கொண்ட விளையாட்டுப் போட்டியாக அமெரிக்காவில் நடைபெறும் என்.பி.ஏ. கூடைப்பந்துப் போட்டியுள்ளது. தற்போது அதற்கு அடுத்த இடத்தை இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டி பிடித்துள்ளது.

அதிகளவு பணம் புழங்கும் விளையாட்டுப் போட்டியாகவும் ஐ.பி.எல். சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. அதிக வருமானம் பெறும் அணி வரிசையில் பெங்களூர் அணி 26ஆவது இடத்தையும் கொல்கத்தா அணி 29ஆவது இடத்தையும் பஞ்சாப் அணி 40 இடத்தையும் மும்பை இந்தியன்ஸ் அணி 44ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

### புனே, கொச்சி பணம் கட்ட மறுப்பு

ஐ.பி.எல். அணிகளில் அதிக விலைக்கு ஏலம் எடுக்கப்பட்ட புனே, கொச்சி அணிகள் இதுவரை முழுப்பணத்தையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் (பி.சி.சி.ஐ.) கட்டவில்லை. புனே அணி ஆயிரத்து 700 கோடிக்கும் கொச்சி அணி ஆயிரத்து 500 கோடிக்கும் ஏலம் எடுக்கப்பட்டது.

ஐ.பி.எல். விதிப்படி போட்டிக்கு முன் ஏலத்தொகை பணத்தை பி.சி.சி.ஐயிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு கட்ட வேண்டிய பணத்தில் 75 சதவீத பணத்தை மட்டுமே இரு அணிகளும் கட்டியுள்ளன.

மீதமுள்ள பணத்தை போட்டி முடிந்த பின் தருவதாக இரு அணிகளும் தெரிவித்துள்ளன.


### ரூ.2 ஆயிரத்து 250 கோடி சூதாட்டம்

மொகாலியில் நடந்த இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதிய உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இதுபற்றி ஐ.சி.சி. முன்னாள் தலைமைச் செயலதிகாரி மல்கம் ஸ்பீட் கூறும்போது,

இந்த ஆட்டத்தில் அதிகபட்ச சூதாட்டம் நடந்துள்ளது. குறிப்பாக 2 ஆயிரத்து 250 கோடிக்கு (இந்திய ரூபாய் பெறுமதியில்) சூதாட்டம் நடந்துள்ளது. இந்தியாவில் எந்த போட்டி நடந்தாலும் சுமார் 900 கோடி அளவுக்கு சூதாட்டம் நடக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

# உலகின் செல்வாக்கு மிக்கவர்களில் அணித்தலைவர் தோனிக்கு 52-வது இடம்

## ரைம்ஸ் பத்திரிகை கௌரவம்



உலகின் செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி அமெரிக்க அதிபர் ஒபாமாவை முந்தினார். இவருக்கு பிரபல ரைம்ஸ் பத்திரிகை 52ஆவது இடத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

உலகம் முழுவதும் ஒவ்வொரு துறையிலும் செல்வாக்கு மிகுந்த முதல் 100 நபர்களின் பட்டியலை அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ரைம்ஸ் பத்திரிகை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியலில் தோனி, முகேஷ் அம்பானி உள்ளிட்ட 5 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதில் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் தலைவர் தோனி 52ஆவது இடம் பிடித்து இந்தியா சார்பில் முன்னிலை பெற்று அசத்தினார். இதற்கு முன் விளையாட்டுத்துறையில் இருந்து இந்தியாவின் சச்சின் மட்டுமே இப்பத்திரிகையின் கௌரவத்தை பெற்றிருந்தார். தற்போது இரண்டாவது வீரராக தோனி சாதித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ஒபாமா 87 ஆவது இடத்தையே பெற்றுள்ளார். முன்னணி கால்பந்துவீரர் மெஸ்சி (ஆர்ஜென்டீனா) 88ஆவது இடத்திலுள்ளார்.

கடந்த 2007இல் இருபது-20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இந்திய அணித்தலைவர் தோனி இதுவரை 54 டெஸ்ட் (2925 ஓட்டங்கள்), 186 ஒருநாள் (6049 ஓட்டங்கள்) போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இந்திய அணியின் வெற்றிகரமான அணித்தவைர் என்ற பெயர் பெற்ற தோனிக்கு சமீபத்திய உலகக் கிண்ணம் அதிக பெயரை சம்பாதித்துத் தந்துள்ளது.

இதுகுறித்து ரைம்ஸ் பத்திரிகை மிகச் சிறந்த அணித்தலைவர் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில், எந்த காலத்திலும் இந்திய அணியின் சிறந்த அணித்தலைவராக தோனியை உலகம் அங்கீகரித்துள்ளது. மிகச்சிறிய ஊரில் இருந்து வந்த தோனி வியக்கத்தக்க அளவில் புகழ் பெற்றுள்ளார். தனது அமைதியான குணம் உறுதியான முடிவெடுக்கும் திறனால் அனைவராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் தலைவராக மட்டும் தோனி இருக்கவில்லை. இந்தியர்களின் நம்பிக்கைக்குரியவராக மாறியுள்ளார். இவர் உலகக் கிண்ணத்தை மட்டும் வென்று தரவில்லை. எப்படி வெற்றி பெறுவது என்று இந்தியர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளார்.

இவ்வாறு அந்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.நாவின் முழுமையான அறிக்...

வெளிவந்துள்ளனவே, அதைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்: கடந்த ஒன்பது மாதங்களாக நடைபெற்ற விசாரணையின் அறிக்கை இன்னும் அதிகார பூர்வமாக முழுமையும் வெளியிடப் படவில்லை என்ற போதிலும், அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் சில ஏடுகளில் எல்லாம் வெளிவந்துள்ளன.

அந்த அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பலரும் அறிக்கைகளை விட்டுக் கொண்டுள்ளார்கள்.

இந்த விசாரணை ஆணையத்தை அமைத்த ஐ.நா.மன்றம் என்ன செய்யப் போகிறதுஎன்றும் தெரியவில்லை. நமது மத்திய அரசு இந்த அறிக்கை மீது எப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது என்ற விபரமும் வரவில்லை ஆனால், இதிலே அறிக்கை விட்ட ஜெயலலிதா வழக்கம்போல தேவையில்லாமல் 2009-ம் ஆண்டு இலங்கை இராணுவத் துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் உச்சக் கட்டத்தில் நடைபெற்றபோது நான் உண் ணாவிரதம் இருந்ததை கபட நாடகம் என்றும், மத்திய அரசின் மூல மாக தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளின் நாடாளு மன்ற உறுப்பினர்களின் குழு இலங்கை சென்று வந்ததை குறை கூறியும் ஒரு அநாகரிகமான, அவருக்கே உரிய நடையில் வெளிவந்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் அடுக் கடுக்காக கொல்லப்பட்ட போது, போர் என்றால் பொது மக்களும் கொல்லப்படுவது சகஜம்தான் என்று ஈழத்து இனப் போரினை இழித்தும் பழித்தும் ஜெயலலிதா கூறியதை தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்பது ஜெயலலிதாவின் நினைப்பு!

எது எப்படியோ ? வருகிற 25ம் திகதியன்று எந்தவிதமான திருத்தமும் இன்றி இலங்கை போர்க் குற்ற அறிக்கை முழுமையாக வெளியிடப் படும் என்று ஐ.நா.சபை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரபூர்வமாக அந்த அறிக்கை வெளியான பிறகு மத்திய அரசு கால தாமதம் இல்லாமல் அதைப் பற்றி முறையான நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்று கருணாநிதி கூறியுள்ளார். (ச-5)

# அரசாங்கம்-தமிழ்க்...

வுள்ளதாக கூறியுள்ளார்.

அத்துடன் சிங்கப்பூருக்கு விஜயம் செய்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் எந்தவொரு பிரதிநிதியையோ சந்திக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம்பெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்படவுள்ள விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தவே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு சிங்கப்பூருக்கு விஜயம் செய்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்திக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்கப்பூருக்கு விஜயம் செய்ததாக பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)


## இறைச்சிக் கோழி விற்பனை

CSI

மொத்தமாக -280/=
சில்லறை -300/=

வரணி மிஷன் பாம், வரணி

தொடர்புகளுக்கு: 0779690939

(4683)

## 3D Animation/VFX

[Maya - 3D Max - After Effects]

Autodesk 3DS MAX 9 | Autodesk Maya | Autodesk MotionBuilder | Adobe

TV/Film/Add.ஆகிய துறைகளுக்கு ஏற்றவகையில்

இந்தியாவில் மேலதிக கற்கைகளை பூர்த்திசெய்த, TV, திரைத் துறையில் அனுபவம் உள்ள ஆசிரியரினால் நேரடியாகக் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு தொடர்புகொள்க : 0750393776

## சேவை முகவர்

### வீடு, காணி விற்பனைக்கு

நுணாவில் A9 றோட்டிலிருந்து 9 பரப்பு காணி, ஸ்ரான்லிவீதியில் களஞ்சியசாலைக்குரிய கட்டிடம், நுணாவில் A9 றோட்டிலிருந்து 1000m தூரத்தில் 21பரப்பு தென்னம் காணி, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம்,பழம் வீதி, மணல்தறை லேன், கோண்டாவில், வைமன்றோட், உரும்பிராயில்9 பரப்பு ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு. யாழ்., நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு :சுந்தரம்

021 222 9177, 0774819801 (4682)

## கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள A/C சிறந்த முறையில் (WORKING CONDITION), POWER STEERING, மற்றும் அனைத்து வளங்களுடனும் NISSAN B 11 14 XXXX தொடரிலக்க முடைய கார் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

S M COMPEX
824, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (468)

தொடர்பு: 0774528818

## கலைமகள் அழகு நிலா

≋ Beauty Academy ≋

புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்
பயிற்சி ஆரம்பம் – 1ஆம் பிரிவு 01/05/2011
2ஆம் பிரிவு 03/05/2011
சனி, ஞாயிறு தினங்களிலும் வகுப்புக்கள் இடம்பெறும்.
பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
வயதெல்லைகள் கிடையாது. பயிற்சியினை பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியை பெற்றுக் கொள்ளவும்.

பயிற்சிகள்

* Facial (10 வகை)
* Eyebrow Threading
* Pimple Treatment
* Waxing
* Hair Stratening (02 வகை)
* Hair Perming
* Hot oil Massage
  Hair Cutting
* Hair Colouring
* Hair dye
* Pedeicure Manicure
* Bleaching
* கறுப்புக் காய்களை இயந்திரம் மூலம் அகற்றுதல்
* Bridal make up (6 வகை)
* Wedding Icing

தொடர்புகள்: 077371907

பயிற்சி நேரம் - மு.ப.10.00 மணி - மதியம் 1.00 மணி வரை
அனுமதிகட்டணம் - 1000 /-
பயிற்சிக்கான கட்டணத்தை தவணைமுறையில் செலுத்தலாம்

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3057)

## STUDYING ENGLISH

இலகுவாகவும் சரளமாகவும் ஆங்கிலம் பேச.....
வெளிநாட்டு பயணங்களுக்கான ஆங்கில அறிவை பெற..
சரியான சர்வதேச அங்கிகாரம் கொண்ட ஆங்கிலம் க

Spoken English Courses
Diploma in English Courses

**KID ENGLISH**

உங்கள் குழந்தை 6 முதல் 12 வயதிற்கு உட்பட்டவரா அவரின் ஆங்கில அறிவை அரம்பத்திலே முன்னேற்ற ஓர் அரிய சந்தர்ப்பம்

**VISA - ENGLISH TRAINING COURSE**

உங்கள் கணவன் மனைவி வெழிநாட்டில் வசிப்பவரா உங்கள் ஆங்கில பேச்சு திறனை உறுதி படுத்திகொள்ள விசா பெறுவதற்கான ஆங்கில அறிவை பெற முந்திகொள்ளுங்கள்

**WESTMINSTER**
INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna. (Next to jaffna university)
Tel : 0113056888 - 0213207778 - 0722238778
www.westminsteredu.com 0771919192

Less Cost Quick ENGLISH

## British College of English

BRITISH COUNCIL

# IELTS



IELTS Registration Centre for British Council.

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

We Provide

* A Placement test which determines to which level to which level of English you belong.
* Updated course modules
* Materials approved by British Council which are quite new including Cambridge 8
* 20 practice test
* Free IELTS Pack & Mock Exams

| Course Schedule | Saturday & Sunday | Week days |
| --- | --- | --- |
| Duration | 10 Weeks | 10 Weeks |
| Time | 2.00 p.m 5.00 p.m | 3.00 p.m 5.00 p.m |
| Commencement | 30rd April. 2010 | 02nd May. 2010 |

எமது கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

வகுப்புகள் 30.04.2011 ஆரம்பம்

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)


## மரண அறிவித்தல்

# கருணாகரன் ஈஸ்வரி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த கருணாகரன் ஈஸ்வரி அவர்கள் 23.04.2011 (நேற்று) காலமானார்.



அன்னார் இரத்தினம் கருணாகரனின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற நாகநாதன் சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ் சென்ற இரத்தினம் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகளும் நாகநாதன், அருந்தவநாதனின் பாசமிகு சகோதரியும் லவன், கயந்தினி, தக்ஷாயினி, பிரசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரபாகரனின் பாசமிகு மாமியாரும் கிருஸ்ணியா, வதுசன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் மகேந்திரநாதன், காந்தராசா, தவபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

24.04.2011 இன்று அன்னாரின் இல்லத்தில் பகல் 11 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று விலங்கன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

(C-3061)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.